# போக்கு ஒன்றேதான்! பெயர்தான் வெவ்வேறு!

Phone No. 4502 | Regd. No. M. 5458

விலை அணா ஒன்று | இலங்கை 10 சதம்

# மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

( திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ் )

மலர் 1 | சென்னை (28—10—49) | வெளியீடு (29—10—49) | இதழ் 76

## தடைதான் நீங்கிற்றும்! தரம் உயர்வு இனிமேல்தானும்!

## வாழ்க்கைத்தரம் வேண்டுவோர் மேலும் வரி தரவேண்டுமாம்!

### மந்திரியாரின் மயக்கமும் - மனப் புழுக்கமும்!

“காங்கிரஸ ஆட்சியில் பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்த நிலைமையே நீடிப்பதாக மக்கள் குறை கூறுகின்றனர். அவர்கள் கூறுவது உண்மையே.”

“சுதந்திரம் கிடைத்துவிட்டதால் நாட்டிற்கு எல்லாக் கஷ்டங்களும் தீர்ந்துவிட்டதாக எண்ணிவிடக் கூடாது. நாட்டு முன்னேற்றத்திற்குத் தடை நீங்கிவிட்டதாகத்தான் கொள்ளலாம். பொது மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு காந்திஜி வகுத்த பல திட்டங்களைச் சர்க்கார் அமுல் நடத்தப்போகிறது.”

“பொருளாதார சுதந்திரம் இனிமேல்தான் கிடைக்கவேண்டும்.”

“பொதுமக்களின் நம்பிக்கைக் காரணமாகத்தான் காங்கிரஸ் அதிகாரத்துக்கு வந்தது. அந்த நம்பிக்கையை காங்கிரஸ் தனது செயல்மூலமாக ஊர்ஜிதம் செய்துகொள்ளும்.”

“உணவுக்கஷ்டம் தீருவதற்கு உற்பத்தியைப் பெருக்கவேண்டியது அவசியம். இந்த வகையில் சர்க்காருடன் மக்கள் ஒத்துழைக்க. பல திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நிதி அவசியம். அதற்கு வரி விதிப்பு அவசியம் என்பதை மக்கள் உணரவேண்டும்.”

பிரிட்டிஷ் ஆட்சிக்கும் காங்கிரஸ் ஆட்சிக்கும் நடவடிக்கையில் துளியும் மாறுபாடு இல்லை,

அரசியல் விடுதலையால் மட்டுமே மக்களுக்குள்ள கஷ்டங்கள் நீங்கிவிடாது.

பொது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு காந்தியாரின் நிர்மாண திட்டத்தை அமுல் நடத்தப் போகிறது சர்க்கார்.

உற்பத்தியைப் பெருக்க சர்க்கார் வகுத்துள்ள திட்டங்களை நிறைவேற்றப் பெரும் தொகை தேவை. அதற்கான அதிக வரி கொடுக்க மக்கள் பின்வாங்கக் கூடாது.

பொது மக்களின் அன்பால் பதவியில் உள்ள காங்கிரஸ், அந்த ஆதரவை தம் செயல் மூலம் உறுதியாக்கிக்கொள்ளும்.

வேலூரில், மேற்குறித்துள்ளவாறு, மந்திரி பக்தவத்சலனார், சில நாளைக்கு முன் பேசியுள்ளார்.

ஏகாதிபத்தியப் பிடியிலிருந்து இத்துணைக்கண்டம் அகன்றதும், வெள்ளையர் காலி செய்த இடத்தில் காங்கிரசார் அமர்ந்ததும், நாட்டுக்குப் புதிய நிலை, மக்களுக்கு நல்வாழ்வு கிடைக்குமென்று நம்பிக்கை கொண்டிருந்தவர்கள் நாட்டு மக்கள் மட்டுமன்று; அதிகாரத்தில் அமர்ந்துள்ள அமைச்சர்கள் முதல், சலசலப்புச் செய்துவரும் காமராஜர் வரை திரிகரண சுத்தியாக நம்பிக்கைகொண்டுதான் இருந்தனர். ஆனால் அனுபவம் வேறாக இருக்கிறது. இப்படித் திரும்பினால் இடி, அப்படித் திரும்பினால் அடி என்ற நிலையில் சென்னை காங்கிரஸ் மந்திரிசபையினர் கண்களைக் கசக்கிக்கொண்டும், கைகளைப் பிசைந்துகொண்டும், காலங்கழித்துக்கொண்டு வருகிறார்கள் என்பதையும் நாம் அறிவோம்.

ஆங்கிலேயர் வெளியேறினதும் அன்றையத்தினமே, நாட்டில் பாலும் தேனும் பெருக்கெடுத்து ஓடுமென்று பேசி, காங்கிரஸ்காரர்கள் கனங்கள் ஆவதற்கு முன், ஊர் ஊராகச் சென்று, மக்களின் படைபலத்தைத் தங்கள் கட்சிக்குச் சாதகமாகத் திரட்டிவந்தார்கள். வெள்ளையர் வெளியேறினதும் நல்வாழ்வு கிடைத்துவிடுமே என்ற ஆசை, பொது மக்களின் வெள்ளை உள்ளங்களை உறுதியாகப் பற்றிக்கொண்டது. காங்கிரஸ் கட்சியினரை ‘கற்பக’ விருட்சங்களெனக்கொண்டனர்; அறுசுவை உணவளிக்கும் ‘அமுதசுரபி’ என நம்பினர் மக்கள். மாலைமரியாதைகளும், வரவேற்பு வாழ்த்துக்களும் காங்கிரஸ் கட்சியினரை வலமாகவும் இடமாகவும் வந்துகொண்டு இருந்தன. இதன் பலனாக உள்ளத்தில் உவகையும், பார்வையில் தனி கம்பீரமும், நடையில் மிடுக்கும், பேச்சில் அணவமும் காங்கிரஸ் கட்சியினரிடம் வந்து குடியேறின.

இன்று எதிர்பார்த்தது ஈடேறவில்லை. ஏமாற்றப் படுகுழியில் மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். வறுமைத் தேள் வேறு நிமிஷத்துக்கு நிமிஷம் கொட்டிக்கொண்டு இருக்கிறது. இதன் விளைவாக, மக்கள் பட்டெடுத்தாடும் பாம்பாகியுள்ளனர். பரம சாதுக்களாக மட்டுமே மக்கள் இருப்பதைக் கண்டுகளித்தக் காங்கிரஸ் கண்கள், இந்தப் பாம்பாகி இருக்கும் பயங்கரக் காட்சியைக் கண்டதும் கண்களை இறுக்கி மூடிக்கொள்ளுகிறது. சிரம் சுற்றுகிறது. நா குளறுகிறது. கட்டுதிட்டமில்லாமல், வரையறை இல்லாமல், கடிவாளமில்லாத குதிரைபோல், கணத்துக்குக் கணம் முரண்பட்டு கத்துகிறார்கள். காங்கிரஸ் அமைச்சர்களுக்கும் இதில் விலக்கில்லை.

காந்தியப் பொருளாதாரத்தில் முக்கியமானது கைராட்

[தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்க]

## எது நாட்டுக்கு இழிவு?

### மக்களை ஒன்றுபடச் செய்வதா? பிரித்து வைப்பதா?

#### அமைச்சர் அறிந்துகொள்ள முடியாத நிலை

சென்னை மாகிலக் கல்வியமைச்சர் செய்யாற்றில் பேசியபோது ‘தமிழ் நாட்டில் சாதி—பாஷை வேற்றுமையிருப்பது சமநாட்டுக்கே கேவலமென்றும், சில சுயநலமிகள் அரசியல் சூழ்ச்சிக்காகத் “திராவிடநாடு திராவிடருக்கே” என்று கூச்சலிடுகிறார்களென்றும். சமஸ்கிருதம் எல்லா பாஷைகளுக்கும் மூலாதாரமாகையால் அதற்கு ஆதரவு தரவேண்டுமென்றும் கூறியிருக்கிறார்’

தமிழ் நாட்டில் சாதி - பாஷை வேற்றுமைகள் கூடாவென்பதற்காகத்தான் திராவிடர் இயக்கம் துவக்கம் முதல் தொண்டாற்றி வருகிறதென்பதையும், அதன் உழைப்பின் பலனே இன்று சாதிக்கட்டுப்பாடு, சாதிப்பிரஷ்டம் என்பவைகள் மறைந்து, சாதிப்பெயர்கள் வைத்துக்கொள்வதையும், என்னசாதி? என்று ஒருவரையொருவர் கேட்டுக்கொள்வதையும் அநாகரிகமெனக்கருதும் மனப்பான்மை தமிழ் நாட்டில் வளர்ந்து வந்திருக்கிறதென்பதைக் கல்வியமைச்சர் அறிந்திலர் போலும்! கலப்பு மணம், சமத்துவ மனப்பான்மை போன்றவற்றை மக்கள் மனத்தில் பதியவைத்து நடைமுறையில் அவற்றை அனுசரிக்கச் செய்தது, திராவிடர் இயக்கமேயென்பது கல்வி அமைச்சருக்குத் தெரியாது போலும்!

ஆனால், கல்வியமைச்சர் நாட்டின் அரசாங்கச்செலவில் செய்து வரும் சமஸ்கிருதமொழிப்பிரசாரம் இந்த நாட்டிலே சாதி—மொழி வேற்றுமைகளை வளர்த்து வைத்திருக்கிறதென்றும், அதற்குக்காரணம் கல்வியமைச்சர் போன்றவர்கள் அதிகாரபீடத்தில் அமர்ந்தோர்கள் காலங்களில் தாய்மொழியில் கவலை செலுத்தாமல், அதை வளர்க்க முன்வராமல் இப்போது செய்வது போலச் சமஸ்கிருதத்தை வளர்க்க முனைந்ததுதானென்றும் வரலாறு கூறுவதை அமைச்சர் அறிவாரா? சமஸ்கிருதம் எல்லா மொழிகளுக்கும் மூலாதாரம் என்று கூறத் துணிந்த அமைச்சருக்குத் தம் கூற்றுப் பொய்யானதென்பதாவது தெரியுமா? சமஸ்கிருதம் தமிழ் மொழிக்கு மூலாதாரமானது அன்றென்பதும், தமிழ்மொழி, மலையாள மொழியைப்போன்று சமஸ்கிருதமில்லாவிட்டால் வீழ்ச்சியடையக் கூடியதன்றென்பதும் அமைச்சருக்குத் தெரியுமா?

இந்நிலையில் அவர் சமஸ்கிருதத்திலிருக்கும் மோகத்தால், அதைப்பற்றி என்ன வேண்டுமானாலும், அமைச்சர் பதவியிலிருக்கும் காரணத்தால் பேசிவிடுவதென்பது நியாயமா?

“திராவிடநாடு திராவிடருக்கே” என்பது அரசியல் சூழ்ச்சி என்கிறார் அமைச்சர். ‘தமிழ்நாடு தமிழருக்கே’ என்று திராவிடர்கள் 12 ஆண்டுகளுக்கு முன்னர்த் துவக்கிக் கொடுத்த எண்ணம் இன்று, ஆட்சிப்பீடத்தில் உள்ளவர்களை ஏற்றுக்கொள்ளுமாறு செய்திருப்பது போல, அமைச்சர் கருத்தில் அரசியல் சூழ்ச்சியாகக் காணப்படும் இந்தக் கூற்றையும் இன்று அவர் அஞ்சினாலும், ஒரு நாளைக்கு அவரோ, அவரைச்சேர்ந்தவர்களோ ஏற்றுக்கொண்டே தீரவேண்டும் என்பது உறுதி. நம்நாட்டை நமக்கு உரிமையாக்க வேண்டும். என்று கேட்பதும், நம் தாய்மொழி பிறமொழிகளின் ஆக்ரமிப்பிலிருந்து காக்கப்படவேண்டும் என்று கேட்பதும், நம் நாட்டிலே எந்த விதமான உயர்வு தாழ்வும், வேற்றுமையும் கூடாவென்று கூறுவதும். வேற்றுமையை வளர்க்கும் தத்துவங்கள், செயல்கள், சடங்குகள். முதலியவை நடைபெறக் கூடாதென்று கூறுவதும் அமைச்சரின் கருத்தில் அரசியல் சூழ்ச்சியாயிருக்குமானால், நாட்டுக்கு நலம், நாட்டுப்பற்று, மக்கள் நலனுக்குரிய தொண்டு என்பவற்றிற்கு அமைச்சரின் அகராதியில் என்ன பொருள்தான் இருக்கின்றனவோ!

## பஞ்சப் பாட்டு!

“தரித்திர இந்தியாவிடமிருந்தா தாராளம் வேண்டும் என்று எதிர்ப்பார்ப்பது? இந்திய மக்கள் மிகக் குறைந்த விலைக்குப் பொருள்களைக் கொடுத்து இந்த நிதியைச் சேர்த்திருக்கின்றனர். அப்படிப்பட்ட டாலர்களே ஸ்டர்லிங்குகளாக மாற்றப்பட்டிருக்கின்றன. யுத்த காலத்தில் செய்த இந்த தியாகத்திற்கு ஏதோ கொஞ்ச பலன் கிடைக்கும் என்ற திருப்திதான் மிச்சமாக இருக்கிறது,”

என்று அண்மையில் ஒட்டாவாவில் பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில் பேசிய போது இந்திய முதலமைச்சர் பண்டித நேரு பேசியிருக்கிறார். பண்டிதரின் இந்தப் பேச்சில் எவ்வளவு பரிதாபம் கலந்திருக்கிறது என்பதை நாம் கவனிக்க வேண்டும். இங்ஙனம் இந்தியாவின் பணம் முதலாளித்வ நாடுகளிடம் சிக்கியிருப்பதற்கும், அதனை பெற பண்டிதர் பஞ்சப்பாட்டு பாடுவதற்கும் காரணமாயிருப்பது காமன்வெல்த் நாடுகளின் உறவு என்பதில் ஐயமென்ன!

## அர்த்தமற்றப் பேச்சு!

இலங்கையில் நம்மவர் வாக்குரிமைப் பறிபோகும் பக்குவத்தைப் பற்றி அண்மையில் நாம் குறிப்பிட்டிருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். அந்த உரிமை பறிக்கும் படலம் கடந்த 21-ந் தேதியோடு ஒருவாறு முடிந்து, இலங்கை அரசியலாரின் முத்திரையும் இடப்பட்டுவிட்டது.

இலங்கை பார்லிமெண்டரி தேர்தல் சீர்திருத்த மசோதா இரண்டாம் முறையாக 49 வோட்டுகள் பெற்று நிறைவேறிவிட்டது. இம் மசோதாவை எதிர்த்து வோட்டளித்தவர் தொகை 39. 49-க்கும் 39-க்கும் இடையேயுள்ள வேற்றுமை 10. இந்தப் பத்து வோட்டுகள் அதிகமாகப் பெற்றுவிட்ட ஒரே காரணத்தால், இலங்கை அரசாங்கம், தான் செய்த காரியம் சிறப்புடையது என்று கருதுகிறது. இந்தியாவின் வாக்குரிமையைப் பறிப்பதில் 10 பேரே அக்கறை கொண்டவர்களாக இருக்கின்றனரென்றால், இது எதைக்காட்டுகிறது? இலங்கையின் உயர்வுக்குக் காரணமாக இருந்தவர்கள் இந்தியர். எனவே அவர்களைப் புறக்கணிப்பது சரியல்ல என்ற எண்ணம், அந்நாட்டு ஆட்சியாளரில் பெரும்பான்மையோரிடம் இருந்திருக்கிறது என்பதைத் தானே யன்றி வேறில்லை.

இந்த மசோதா எப்படியும் நிறைவேறப்பட்டு விடும் என்பது நாம் எதிர்பார்த்ததே. ஆகவே நாம் கவலைப்படவில்லை. ஆனால், இம் மசோதாவை நிறைவேற்றுவதன் மூலம், நாம் யாருக்கும் அநீதி வழங்கவில்லை என்று, இலங்கை நீதி மந்திரி தோழர் ஜயவர்த்தனா பேசும் அர்த்த மற்றப் பேச்சைத்தான் கண்டிக்கிறோம். மற்ற நாடுகளில் செய்யப்பட்டிருப்பது போலவே இலங்கையிலும் செய்யப்பட்டிருக்கிறது, என்று சொல்லுகிறார் தோழர் ஜயவர்த்தனா. ஆனால் அயல்நாட்டுச் சட்டங்களை ஆதாரமாகக்காட்டும் அவர், இலங்கைக்கும் இந்தியருக்கும் உள்ள தொடர்பின் தன்மை உணராமற் போனதுதான் வருந்தத்தக்கது. இந்தியரால் இலங்கை சுரண்டப்பட்டதில்லை, அதற்கு மாறாக வளம் பெற்றது. இதனை நாம் முன்னமே, சுட்டிக்காட்டியுள்ளோம். அப்படியிருந்தும் “நாங்கள் யாருக்கும் அநியாயம் செய்து விடவில்லை” என்று அர்த்தப் பேச்சுப் பேசுகிறார், தோழர் ஜயவர்த்தனா. இதனை அர்த்தமற்றப் பேச்சு என்கிறோம் நாம்.

# மாலை மணி

சென்னை 28—10—49 வெள்ளிக்கிழமை


# பாம்புக்குப் பாலூட்டுவதா?

பாதை ஓரத்தில், ஒருபாம்பின் தலையில் பாராங்கல் ஒன்று வைக்கப் பட்டிருந்தது. அவ்வழியே சென்ற வழிப்போக்கன் இதனைக் கண்ணுற்ருன். பாம்பின் மீது பச்சாதாபம் கொள்ளலாமா என்று நினைக்காமல், பாம்பின் தலையில் இருந்தப் பாரங்கல்லை அப்புறப் படுத்திவிட்டு, பாம்பிற்கு விமோசனம் அளித்தான். அந்தப் பாம்பு, புற்று ஒன்றைத் தேடிப் பதுங்கிக்கொள்ள முயற்சிக்கவில்லை. பாராங்கல்லைத் தூக்கி எறிந்துவிட்டு, தனக்கு உயிர்ப் பிச்சை அளித்தவனைத், தன் நச்சுப் பல்லால் தீண்ட முயற்சித்தது. பாம்புக்கு உபகாரம் செய்ததின் பலன் உபகாரிக்குக் கைமேல் கிடைத்துவிட்டது.

இந்தக் கதைபோல் இத்துணைக் கண்டத்தின், சர்க்கரைத் தொழில் இருந்து வருகிறது. கதையில் வரும் பாம்பிற்கும், இந்தச் சர்க்கரைத் தொழிலின் தொழில் அரசர்களுக்கும் உருவில் வித்தியாசமிருக்கிறதேயன்றி பண்பில் வித்தியாசம் இருப்பதாகத் தெரியவில்லை. நாட்டின் பொருள் உற்பத்தி, மக்களின் நலம் எதுவும் இவர்களுக்குக் கிடையாது. தேசீயம் பேசி தங்கள் திருமேனியைக் கொழுக்க வைத்துக் கொள்வதுதான் இவர்களுடைய முழுவிருப்பமும். இவர்களுடைய பண வேட்டைக்கு, எந்தவிதப் பாதகத்தையும் செய்யப் பின் வாங்க மாட்டார்கள். மக்களிடத்திலும் ஒன்றுக்குப் பத்தாக விலை கூறி பணம் பறிப்பார்கள். தங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிற சர்க்காரையும் ஓடஓட மிரட்டிக் கொண்டே, மேலும் மேலும் சலுகைகள் பெற முயலுவார்கள். இவர்கள் அடிக்கடி உச்சரிக்கும் 'தேச நலம்' என்பதற்கு, 'சொந்த நலம்—சொந்த லாபம்' என்பதுதான் உண்மையான பொருள் ஆகும்.

இத்துணைக் கண்டத்தில் மொத்தம் 134 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. இதில் நூற்றுக்கு மேற்பட்ட ஆலைகள் ஐக்கிய மாகாணத்திலும் பீகார் மாகாணத்திலும் தான் இருக்கின்றன. இவ்விரு மாகாணங்களின் சர்க்கரை ஆலை முதலாளிகள் அனைவரும் ஒன்றுகூடி ஒரு சங்கத்தை வைத்துக் கொண்டு இருக்கிருர்கள். கரும்பு விலையை நிர்ணயிக்க, சர்க்கரை ஆலைத் தொழிலாளிகளின் கூலி விகிதத்தைத் தீர்மானிக்க, சர்க்கரை உற்பத்தியைக் கட்டுப்படுத்த, விலையைக் கூட்ட, சர்க்கரையை வினியோகிக்க, ஆகிய எல்லா பொறுப்பும் இந்தச் சங்கத்திற்கு இருந்து வருகிறது. இந்தச் சங்கத்தைக் கலந்துகொள்ளாமல் மத்திய சர்க்கார், இத்தொழிலில், தம்மிச்சையாக எந்தவித நடவடிக்கையும் எடுத்துக்கொள்வது கிடையாது. இப்படி சர்வாதிகாரம் கொண்டுள்ள முதலாளிகளின் ஸ்தாபனத்தின் பெயர்தான் 'ஷுகர்' சிண்டிகேட்! என்பது!

தென்னாட்டைப் பொறுத்த வரையில் உள்ள சர்க்கரை ஆலைகள் இந்த சிண்டிகேட்டில் பங்கு பெற்றிருக்கவில்லை. எனவே, தென்னாட்டு ஆலைகளின் குறைபாடுகளைக் கவனித்து, அதனைப் பரிகரிக்க வேண்டிய பொறுப்பு இந்தச் சிண்டிகேட்டுக்குக் கிடையாது. இத்துணைக்கண்டம் முழுவதற்கும் பிரதிநிதித்துவம் பெற்றிராத, ஷுகர் சிண்டிகேட் போன்ற ஒரு ஸ்தாபனத்தின், ஆலோசனையைக் கேட்டு டில்லி சர்க்கார் இது வரையில் நடந்து கொண்டு வந்ததே கண்டிக்கத்தக்கதாகும். இந்த ஸ்தாபனத்தை உடனடியாகக் கலைத்து விடுவதற்கு இது ஒன்றே தகுதியானக் காரணமுமாகும்.

சர்க்கார் தலையிட்டு சர்க்கரை விலையைக் கட்டுப்படுத்தினுல், உற்பத்தியாகும் மொத்த சர்க்கரையில் ஒரு பகுதியை வெளிப்படையாக வினியோகித்து விட்டு, மீதமுள்ள பெரும்பகுதி சர்க்கரையைக் கள்ள மார்க்கட்டில் விலை கூட்டி விற்பதும், சர்க்கார் கட்டுப்பாட்டை நீக்கினுல் வெளிப்படையாகவே விலையை யேற்றி விற்றுப் பணம் திரட்டுவதும், இந்தச் சிண்டிகேட்டின் திருவிளையாடலாகும். சர்க்காரை மிரட்டிச் சலுகை பெறுவதில் நெசவாலை அரசுகளுக்கு இரண்டாம் கட்டத்தில் இருப்பது இந்தச் சிண்டிகேட்டுத்தான் என்று கூறுவது மிகையாகாது.

உள் நாட்டில் தொழில் வளர்ச்சி என்ற பெயரினுல் கடந்த இருபது ஆண்டுகளாக, நமது மக்களின் வரிப் பணத்தில் கொஞ்சம் தானமாகப் பெற்று இத்தொழில் வளர்ந்து வந்திருக்கிறது. பொது மக்களின் நலனுக்கு எதிராக, விலை குறைவில் வெளிநாட்டில் இருந்துஇறக்குமதி செய்யப்பட்டு வந்த சர்க்கரையும், உள்நாட்டின் சர்க்கரைத் தொழில் வளர்ச்சிக்கென, தடுக்கப்பட்டு வந்திருக்கிறது. எனவே இந்தச் சிண்டிகேட்டின் ஏகபோகச் சுரண்டலுக்கு, இத்துணைக் கண்டம் பலியாகிக் கொண்டு இருக்கிறது.

தொழில் வளர்ச்சிக் கென்று அளித்தப் பாதுகாப்பையும், தடுக்கப்பட்ட வியாபாரப் போட்டியையும், சர்க்கரைத் தொழிலில் உற்பத்திப் பெருக்கத்திற்கு, இச்சிண்டிகேட் பயன்படுத்தி இருந்திருக்குமானுல், மேலும் இத்துறையில் பல தொழிற்சாலைகள் புதிதாக ஏற்படவும், மக்களுக்குச் சர்க்கரை குறைந்த விலையில் கிடைக்கவும், அடிக்கடிக்கு இன்று ஏற்பட்டுள்ளது போன்ற சர்க்கரை முட்டு ஏற்படவுமான நிலைமை ஏற்பட்டிருக்காது என்பது நிச்சயம். தனக்கு அளிக்கப்பட்டச் சலுக்கைகள் அனைத்தையும், மக்களை வாட்டி வதைத்து பணம் திரட்டவும், தொழிலை வளர விடாமல் பார்த்துக்கொள்ளவுமே இச்சிண்டிகேட் பயன்படுத்திக்கொண்டு இருக்கிறது. இச்சிண்டி கேட்டைத் தொலைத்துத் தலை முழுகுவதுதான் முதல் முதலாக சர்க்கார் செய்யவேண்டியதாகும்.

தென்னாட்டைப் பொறுத்த வரையில் சர்க்கரைத் தொழில் நன்கு வளர்ச்சி பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. திராவிடத்தின் தொழில் வளர்ச்சிக்கும் மாற்ருந்தாய் போல் நடந்து கொண்டு வரும், டில்லி சர்க்கார் இந்தச் சர்க்கரை தொழில் துறையிலாவது கொஞ்சம் தாராளமாக நடந்துகொள்ள வேண்டுமாகக் கேட்டுக்கொள்ளுகிருேம்.

மேலும் பாதுகாப்புச் சலுகைகள் இத்தொழிலுக்கு அளிப்பதை உடனடியாக நிறுத்தியாக வேண்டும்.

வெளிநாட்டிலிருந்து சர்க்கரையை விலை குறைவாக இருக்குமதி செய்தாக வேண்டும்.

இடைக்காலத்தில், சிண்டிகேட்டின் கணக்குவழக்குகளைப் பரிசீலனை செய்து, தவறு செய்திருப்பவர்களிடம் தயவுதாட்சண்யம் காட்டாமல், தகுந்த தண்டனை அளிக்கவேண்டும். பண்டித ஜவகர் கூறியுள்ளதைப்போல், இந்தப் பொதுமக்கள் பகைவர்களைத் தூக்கிலிட்டு மற்றவர்களுக்கு ஒரு படிப்பினையைக் கற்பிக்க வேண்டும்.

இவ்வளவு அனுபவத்திற்குப் பின்னரும் ஷுகர் சிண்டிக்கேட்டுக்கு சலுகை அளிக்க சர்க்கார் முன்வருமானுல், சிண்டிகேட்டின் சுரண்டலுக்கு வேண்டுமென்றே பொது மக்களைப் பலியிடுகிறது சர்க்கார் என்றுதான் தீர்மானிக்க நேரும்.

சர்க்கரைத் தொழிலுக்குப் பாதுகாப்பு, அளிப்பது பற்றி சில நாளாக விசாரணை செய்துவரும் காப்புவரி குழுவின் தலைவருக்கு இதனை அர்ப்பணம் செய்கிருேம், ஆவன செய்வதற்காக.

## தேசபக்திக்கு விலை!

சியூபா சர்க்கரை மணங்கு ஒன்றுக்கு ரூ. 11-8-0. பிரேஜில் சர்க்கரை மணங்கு ஒன்றுக்கு 17-8-0. இந்திய சர்க்கரை மணங்கு ஒன்றுக்கு ரூ. 30-லிருந்து ரூ. 35 வரையில்.

(காப்புவரி குழுதலைவர்)

## அமெரிக்காவில் பருத்தி உற்பத்தி

1949-ம் ஆண்டு முதல் 5 மாத காலத்தில் அமெரிக்காவிலிருந்து வெளிநாடுகளுக்கு 437,287 000 சதுர கெஜம் பருத்தி ஆடை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. 1948-ம் ஆண்டு முழுவதும் ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு 940,000 000 சதுர கஜமே ஆகையால் இவ்வாண்டில் 5 மாத காலத்தில் ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு முந்திய ஆண்டைவிட அதிகமாகும்.

## போக்கு ஒன்றேதான்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டினம். ஆளுக்கொரு ராட்டினம் கொடுத்தாலும், ராட்டினச் சுற்றிகளின் வாழ்க்கைத்தரம் உயரப்போவதில்லை வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் வல்லமை அந்த ராட்டினத்திற்குக் கிடையாது. அனைவருக்கும் வேலையும், இதனுல் கொடுக்க முடியாது. இல்லாமையின் நினைவுச்சின்னம்தான் இந்தக் கைராட்டினம். இயந்திரத்துக்குப் பதில் உலக்கை! உருப்படாதப் பிரசாரத்தின் திட்டம்! பதனி காய்ச்சுவது காந்தீயப் பொருளாதாரத்தின் புனிதமானத் திட்டமாகஇருக்கலாம்! செல்வப் பெருக்கத்திற்கும், இதற்கும் துளியும் சம்மந்தம் கிடையாது! காகிதம் செய்தல், கட்டித் தங்கத்தைக் கரித்துண்டாக்கும் கேலிக்கூத்து!

இவைபோன்ற காந்திய திட்டங்களால், நாட்டிலுள்ள வறுமையோடு போர்தொடுக்கப்போவதாக பக்தவத்சலனூர் பகருகிருர்! ஐயோ பாவம்! அவருடைய மனப் பரிசுத்தத்திற்கு நாம் மரியாதைக்காட்டுகிருேம்! போதுமா இது மட்டும், அவர் கூறும், வாழ்க்கைத் தர உயர்விற்கு—நாட்டுச் செலவப் பெருக்கத்திற்கு!

வரியை எந்தவகையில் செலவிடப் போகிறீர், எந்தத் துறைகளில் செலவு செய்வது விரும்பக் கூடியது, எந்த இனத்திற்குச் செலவு செய்தால் செலவப் பெருக்கத்திற்கு ஆக்கம் தரும், என்பனவற்றை எடுத்துக்காட்டவிளக்கம் கூற, திருத்தம்கோர வரி கொடுக்கும் மக்களுக்கு உரிமை அதிகாரம் உண்டு. இதனை அடிப்படையாகக் கொண்டு எழுந்ததுதான் மக்களாட்சி முறை இதனை அமைச்சர் அறிந்திருப்பார் என்றே நம்புகிருேம்.

இசை அரங்கிற்கு ஏற்பாடு செய்யும் ஒருவருக்கு, பாடகரைப் பார்த்து 'திருப்புகழ்-காவடிச் சிந்து—திருத்தாண்டகம்-தில்லானு-பாடுங்கள் பாடகரே' என்று கேட்கக் கட்டளை இட உரிமை-அதிகாரம் இயல்பாக உண்டு அவருக்கு ஏன்? ஏற்பாடு செய்தவர் அவர்! பாடகரைப் பொறுக்கி எடுத்தவர் அவர்! பாடகருக்குப் பணத்தை, எண்ணித்தரப் போகிறவர் அவர்! தாம் விரும்பினதைப் பாடுங்கள் என்று கேட்பதற்கு, அவருக்குத்தான் முழு உரிமையும் இருக்கிறது. பாடகருக்கும் உரிமை உண்டு! பாட முடியாது என்று கூறி அரங்கிலேயே வீறாகக் கொண்டு, பணத்திற்குபலியாகாமல் மரியாதையாக அரங்கைவிட்டு அப்புறம் செல்வது தான், பாடத்தெரியாதப் பாடகருக்குள்ள முறையான உரிமை! நான் 'முகாரி' தான் பாடுவேன். நீ பணம் கொடுத்துத்தான் தீரவேண்டும்!' என்று பாடகன் பகர்ந்தால், அரங்கிற்கு ஏற்பாடு செய்தவன் என்ன செய்வான் தெரியுமா? எழுதத்தேவை இல்லை அதனை!

மக்களின் வாழ்க்கைத்தரம் உயர—உற்பத்திப் பெருக—நிறைய நிதி வேண்டும், அதற்கு மக்கள் வரி அதிகம் கொடுக்க வேண்டும்; என்று வேண்டுகோள் விடுகிற மந்திரியார், வரி கொடுக்கும் மக்களின் கோரிக்கைகளுக்கும் செவிசாய்க்க வேண்டிய—கட்டுப்பட வேண்டிய கட்டாயத்தில் இருப்பவராகும். ஜனநாயக முறைப்படித்தான், தாங்கள் ஆட்சி நடத்துவதாக அமைச்சர்கள் கூறிக் கொண்டிருக்கிருர்களே. அதில் உண்மை இருக்குமானுல், யாரைப் பார்த்து 'வரிகொடுங்கள்' என்று கேட்கிருர்களோ, அவர்களின் விருப்பத்தையும் கேட்டு நடக்கப் பழகிக் கொள்ள வேண்டும் மந்திரிமார்கள் காந்தியப் பொருளாதாரம் வெறும் நிர்வாணத் திட்டந்தான் என்பது, அனுபவத்தில் கண்ட—கண்டு வரும் மறுக்கமுடியாத உண்மையாகும். பொருளற்றக் கோட்பாட்டை விட்டு விட்டு. உண்மையில் மக்கள் வாழ்க்கைத்தரத்தை, உயர்த்தும் உருப்படியான திட்டங்களை அமைச்சர்கள் தீட்டட்டும். பின்னர் வரி கொடுங்கள்! என்று கைகளை நீட்டட்டும் மக்களிடம்!

ஏதோ காங்கிரஸ் கட்சியின் கண்மூடி தர்பார் ராகத்தைத் தான், பொது மக்கள் கேட்டு இன்புற்று, காசும் கொடுத்தாக வேண்டுமென்று, மந்திரி பாடகர்கள் அடம்பிடிப்பார்களேயானுல், மக்கள் படமெடுத்தாடும் பாம்பாகத் தானே மாறி சீறுவர்!

இது கண்டு கோபிப்பதும், சோகிப்பதும், அடக்குமுறையை ஏவுவதும், ஆள் தூக்கிச் சட்டத்தை அள்ளி அள்ளி வீசுவதும், எழுந்துள்ளப் பிரச்சினையைத் தீர்க்கவும் தீர்க்காது, அமைச்சர்கள் மீது மக்கள் கொண்டிருந்த அன்பை உயிர்ப்பிக்கவும் செய்யாது. அவர்களாகச் சொல்லுவதற்கு முன்னரே அரங்கத்தை விட்டு அகலுவதுதான், இருக்கும் நிலைமையை உணர்ந்துகொண்டவர்கள் செயலாகும். மக்கள் ஆக விரட்டட்டும் என்று எதிர்பார்த்துக் காலங்கழித்து வருவது, விரும்பக்கூடியதாகாது. அமைச்சர்கள் ஆட்சிப்பீடத்தைத் துறந்து, ஆற்றங்கரையோரத்தில் ஆஸ்ரமம் அமைத்துக்கொண்டு, கைராட்டையைச் சுற்றி, கீதையைப் பாராயணம் செய்து, சொந்த வாழ்க்கைத்தரத்தை உயர்த்திக்கொள்ள இன்றே முன்வரட்டும். நாம் தடுக்கமாட்டோம். பிரிவுபசாரம் கூட வாசித்தளிப்போம்.

தங்களைப்போலவே, ஒவ்வொருவரும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 1500 பெறவேண்டும் என்று திட்டமிடப்போவதாகக் கூறிவிட்டு, கைராட்டையையும் உலக்கையையும் ஆளுக்கொன்ருகக் கொடுத்து உற்பத்தியைப் பெருக்க வரி கொடுங்கள் -ஒத்துழையுங்கள் என்று மந்திரிமார்கள் பேசி வருவது, முழுதும் பொருத்தமற்றதாகும்! மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக மேலும் வரி கொடுத்தாக வேண்டுமென்கிருரே பக்தவத்சலனூர், அது வேறு எதற்காகவாவது இருக்கலாமே யன்றி, கண்டிப்பாக மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக மட்டும் இருக்கமுடியாது என்பது நிச்சயமாகும்.

# குற்றங்கண்ட விடத்துக் கண்டிப்பதே கழக நோக்கம்

## தலைவராயினும் அவர் செய்தது குற்றம் குற்றமே

## தவறு செய்வோரைத் தள்ளிவைக்க வேண்டாமா?

—(o)—

### நாகர்கோவில் தி. மு. கழகத் துவக்க விழாவில் கழகத் தோழர்கள் முழக்கம்

நாகர்கோவில், அக். 2—

நாகர்கோவில் திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழா, நாகர்கோவில் முனிசிபல் மைதானத்தில் வைத்து கோட்டாறு தோழர் கி. மனோகரன் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடந்தேறியது. பதினாயிரத்திற்கு மேற்பட்ட திராவிட மக்கள், இடையே சிறிது மழை பெய்தும் சற்றும் பொருட்படுத்தாமல் கூட்டம் முடிகிறவரை அமைதியாக இருந்தது, மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மேல் உள்ள ஆர்வத்தை விளக்க ஓர் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

**கி. மனோகரன்**

முன்னுரையாகத் தோழர் கி. மனோகரன் அவர்கள் பேசுகையில், நாகர்கோவிலிலேயே ஓர் சிறந்த சத்தியவானாய், சத்தியத்தின் தூதுவராய் இருந்த மாஜி உயர்நீதிபதி, உயர்திரு சத்தியநேசன் அவர்கள் திடீரென்று இயற்கை எய்தியது குறித்து வருந்தியும், அவர்களது பிரிவால் ஏங்கித் தவிக்கும் குடும்பத்தினருக்குக் கழக சார்பாக அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டதோடு, தோழர் ஆர். சித்திரஞ்சன் அவர்களால் கொண்டுவரப்பட்ட அனுதாபத் தீர்மானத்தைக் கூட்டத்தில் நிறைவேற்றினார். மேலும் பேசுகையில், திராவிட முன்னேற்றக் கழகம் அமைக்க வேண்டியதன் அவசியத்தைக் குறித்தும், கடந்த 30 ஆண்டுகளாக திராவிடர் கழகத் தலைவர் பெரியார் இராமசாமி நாட்டுக்குச் செய்த சேவைக்குத் தலைவணக்கம் தெரிவித்தும், ஆனால் தலைவர் பாதை தவறும்போது—தவறிய பாதையினின்றும் மாற கெஞ்சிக் கேட்டும் இயலாததாகும்போது, தலைவரை உதறித் தள்ளிவிட்டு வெளியேறுவது தவிர மார்க்கம் இல்லை என்றும், அதுதான் எதிர்கால மக்களுக்கு நம்மைப் பற்றிய நன்னம்பிக்கைக்கு வழி என்றும், ஆகவே, முறை தவறிய தலைவரைப் புறந்தள்ளிவிட்டு, வேறு கட்சி அமைத்துக்கொண்டதன் மூலம் நமக்கு ஏற்படவிருந்த பெரியதொரு களங்கத்தைக், கறையைக் கழுவிவிட்டோம் என்றும் கூறி, தோழர் புலவர் கோவிந்தன் அவர்களைப் பேசுமாறு பணித்தார்.

**புலவர் கோவிந்தன்**

"தலைவரவர்களே! தோழர்களே! திராவிட முன்னேற்றக் கழகத்தின் துவக்க விழாவை முதன் முதலாக நடத்தி வைக்க நாம் இங்கு பெருந்திரளாகக் கூடியிருக்கிறோம். இங்குள்ள பேச்சாளர்களும், மற்றையோரும் இதற்கு முன்னால் திராவிடர் கழகத்தில் இருந்தவர்கள் என்பதை முதலில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஏன் அவர்கள் இப்பொழுது மன மாற்றம் அடைந்துவிட்டார்கள்? ஏன் அவர்கள் வேறு கட்சி அமைத்துக்கொண்டு தனித்து நின்று பிரச்சாரத்தில் இறங்கியிருக்கிறார்கள்? என்ற கேள்விகள் உங்களுக்கு எழக் கூடும். காரணம், எந்தத் தலைவரால், எந்தக் கொள்கை நாட்டில் பிரசாரம் செய்யப்பட்டதோ, அந்தத் தலைவரால், அதே திட்டம் துச்சமென மதிக்கப்பட்டது; மீறப்பட்டது, காற்றிலே பறக்க விடப்பட்டது. கண்ணீர் சிந்திய கழகத் தோழர்கள் கண்டனங்களைத் தெரிவித்தும், கேட்டறியாதவர் போல் இருந்துவிட்டு, சர்வாதிகாரப் போக்கைக் கடைப்பிடித்து, தான் செய்தது சரி என்றும், அது தனது சொந்த விஷயம் என்றும், அதில் தலையிட யாருக்கும் உரிமையில்லை என்றும் விளக்கம் கொடுக்க ஆரம்பித்தார். கழகத்தில் மணியம்மையைத் தவிர வேறு யாரிடமும் தனக்கு நம்பிக்கையில்லை என்ற கடைசியில் கூறிய காரணம்; கழகத் தோழர்களின் தன்மானத்தை-இலட்சியத்தை கேள்வி கேட்பதாகயிருந்தது. எனவே, இனிமேல் பெரியாருடன் இருந்து பணியாற்றுவது இயலாத—கூடாத காரியமாகப் பட்டது. கண்ணியத்துடன், அதே நேரத்திலே கண்ணீரையுஞ் சிந்திவிட்டு வெளியேறினோம், வேறு கழகம் கண்டோம். அதன் சார்பிலே பிரசாரஞ் செய்யத் தலைப்பட்டுள்ளோம்.

**கழகம் வேறு கொள்கை ஒன்று**

கழகத்தை, திராவிட முன்னேற்றக் கழகம் என்று மாற்றிக் கொண்டோமே தவிர, கொள்கையளவில் இம்மியளவு கூட மாற்றங்கிடையாது. இன்று திராவிடர் கழகத் தலைவர் எங்களைத் தூற்றலாம்! சொல்லம்புகள் தொடுக்கலாம். ஆனால் அவை எல்லாவற்றையுந் தாங்க இதயம் உண்டு என்ற அளவிலே இருக்கிறோம்.

இந்தச் சந்தர்ப்பத்தை நமது மாற்றார்கள் பயன்படுத்திவிடலாம், என்று பிரயத்தனம் செய்கின்றனர். ஆனால் அவர்கள் எதிர்பார்ப்பது ஏமாற்றத்தையே அணைத்துக்கொள்ளும். திராவிடர் கழகத்தார் இந்தி ஒழிக! என்று சொன்னால், நாங்கள் இந்தி வாழ்க! என்று சொல்லப்போவதில்லை. மனுஸ்மிருதி, வேத புராண இதிகாசங்கள் ஒழிக என்று சொன்னால். இல்லை அவைகள் வாழட்டும் என்று நாங்கள் சொல்லப் போவதில்லை.

பல கூட்டங்களிலே பெரியார் பேசியிருக்கிறார்; 'நான் ஒரு சூத்திரனாகச் சாகமாட்டேன்' என்று. ஆனால் திருமணஞ் செய்த அன்று பதிவுப் பத்திரத்தில், தான் ஒரு இந்து பகுத்தறிவுவாதி என்று எழுதி கையொப்பமிட்டுள்ளார். இந்து என்றால் பகுத்தறிவுக்கோ, பகுத்தறிவுவாதிக்கோ இடமில்லை.

(இந்தச் சமயத்தில் சிறிது மழை பெய்ய ஆரம்பித்தது. எனினும் கூட்டம் அப்படியே இருந்தது.)

நமக்குள்ளே தமிழன், தெலுங்கன், மலையாளி என்ற வேறுபாடு கிடையாது. நாம் திராவிடர்கள். நம்மவர் உரிமையை நாமே பாதுகாத்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

**காங்கிரஸ் தந்துள்ள சுதந்திரம்!**

நமக்குச் சுதந்திரம் வந்துவிட்டதென்று சொல்லி தேசீயத் தோழன் கை குலுக்குகிறான். சுதந்திரம் எதற்குப் பயன்படுத்தப்படுகிறது? சுதந்திரம் அரையணா கார்டை முக்காலணாவாக்கியிருக்கிறது. நாட்டிலே எங்குப் பார்த்தாலும் பஞ்சம், பற்றாக்குறை, அரிசி விளைச்சல் குறைவு. வறுமையின் விளையாடல். இந்த நிலைமையில் வெளிநாடுகளில் இருக்கும் பிரதிநிதிகளுக்குச் செலவிடும் தொகைக்கோ கணக்கு கிடையாது! அவர்கள் கோலாகல வாழ்வு நடத்துகிறார்கள். ஆனால் வறுமை இந்தியாவோ, பசியால் துடிக்கிறது. தொழில் இல்லை. தொழிலாளிக்குத் தக்க ஊதியம் இல்லை. வடநாட்டுச் சுரண்டல் காங்கிரஸ் போர்வையில் துரிதமாகவும், விமரிசையாகவும் நடைபெறுகிறது. இந்த நெருக்கடியான கட்டத்தில்தான் நாம் முன்னேற்றக் கழகம் கண்டிருக்கிறோம். எனவே அதில் உறுப்பினராகச் சேர்ந்து, நாட்டிலே நல்ல நிலைமையை ஏற்படுத்த உங்களை அழைக்கிறேன்."

**இரே. இளம்வழுதி**

"தலைவரவர்களே; தோழர்களே! நாங்கள் இப்பொழுது திராவிடர் கழகத்தின் மாறுபட்ட கொடியைக் கொண்டிருக்கிறோம். மேலே முழுவதும் கறுப்பு, கீழ்முழுவதும் சிகப்பு. கீழைத் திசையிலே சூரியன் தன் செங்கதிர்களை வீசி, உலகிலே மலகியிருக்கும் படர் இருளைப் போக்குமாறு போல, கீழ் இருக்கும் சிகப்பு எனும் அறிவுக் கதிர், மேலிருக்கும் கறுப்பு எனும் இருண்ட வாழ்வை—இழி தன்மையை ஒழிய வைக்கும், எனும் பொருள்பட கொடியை அமைத்துள்ளோம். பெரியார் செய்த பொருந்தாத் திருமணத்தை ஏற்க மறுத்த நாங்கள், கொள்கையை மீறிய தலைவரை விடுத்து வெளியேறியிருக்கிறோம். செய்யும் தவறு, யாராலாயினுஞ் சரி. தலைவரானாலும் சரி—சாதாரணத் தொண்டனாயினுஞ்சரி, புறந் தள்ளியே தீருவோம்.

**ஆர் எஸ். எஸ் காங்கிரஸ் ஐக்கியம்**

நான் எனது மதிப்பிற்குரிய தேசீயத் தோழர்களைக் கேட்கிறேன், சமீபத்தில் கூடிய காங்கிரஸ் காரியக் கமிட்டி ஒரு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. அதாவது, உலக உத்தமர் காந்தியாரைக் கொலை செய்வதற்கு உடந்தையாக இருந்த ஆர். எஸ். எஸ். சங்கத்தை திரும்பவும் காங்கிரசில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று. நீங்கள் இதை ஒப்புகிறீர்களா? எங்கள் தலைவர் தவறு செய்தார்! நாங்கள் விலகி நிற்கிறோம். ஆனால் மகாத்மாவையே கொன்று குவித்த ஸ்தாபனத்தை, முதலில் சட்ட விரோதமாக்கி விட்டுப், பின்னால் காங்கிரசில் சேர்க்கும் மானங்கெட்ட போக்கைக் கண்டு, உங்களுக்கு வெட்கமில்லையா என்று கேட்கிறேன். திராவிடர் கழகத்தை வகுப்புவாத ஸ்தாபனம் என்கிறாய்! அதை நாட்டிலே நடமாடவிடக் கூடாது என்று அண்டம் அதிர முழங்குகிறாய்! அதே போது, காந்தியார் போன்ற ஒப்பற்ற உத்தமர்களைக் கொல்லும் அளவிற்குத் தன்னிலை வெறிகொண்டு விட்ட ஓர் ஸ்தாபனத்தோடு சிறிது காலம் தடையுத்தரவு கூட பிறப்பிக்கப்பட்டு கிடந்த ஓர் அமைப்போடு, இன்று உன் புனித காங்கிரஸ் மகாசபை கொஞ்சுகிறதே-குலாவி மகிழ்கிறதே—அதைப் பார்த்து வெட்கித் தலைகுனிய வேண்டாமா நீ!

**தவறு செய்வோரைத் தள்ளி வைக்கவேண்டாமா?**

மான, ரோஷ உணர்விருந்தால் அந்த ஸ்தாபனத்திலிருந்தே உன்னை நீ வேறுபடுத்திக்கொள்ள வேண்டாமா? ஏன் இல்லை அந்த நெஞ்சுரம் உனக்கு? எங்கள் தலைவர், முப்பதாண்டுகளாகத் தன்னிகரற்று சேவை செய்த பெரியார், பாதையினின்றும் தவறினார்—புறக்கணித்தோம்!

ராஜாஜி தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியாரால் விரட்டியடிக்கப்பட்டார். வடநாட்டைத் தஞ்சம்புகுந்தார். திருச்செங்கோடு தேர்தல் செல்லாக காசாக்கப்பட்டது. காந்தியாரின் சப்பந்தி என்று கூடப் பார்க்காமல். அவர் கொள்கையில் தவறினார், காங்கிரஸ் விதி முறைகளுக்கு மாறாக நடக்க முற்பட்டார் என்றாலும், அவர் இன்று கவர்னர் ஜெனரல். காங்கிரஸ் தோழர்கள் சகித்துக் கொண்டுதானிருக்கிறார்கள்.

**குறைகளைக் கவனிப்பார் இல்லை.**

இன்று நாட்டிலே உள்ள நிலைமை என்ன? மாகாணத்தில் எங்கு நோக்கினாலும் பசியும், நோயும். மக்கள் தம் மனக் குறைகளை மந்திரிகளிடம் தெரிவித்தால், மந்திரி, போலீஸ் இன்ஸ்பெக்டரைப் பார்க்கிறார். போலீஸ் இன்ஸ்பெக்டர், போலீஸ்காரனைப் பார்க்கிறார். போலீஸ்காரன் தன் கைத்தடியைப் பார்க்கிறான். தடி ஏழைகளின் முதுகைப் பதம்பார்க்கிறது! மக்களின் குறைகளைக் கவனிப்பார் இல்லை. அதிகாரிகள் தங்கள் அதிகாரத்தைத், தங்களது வாழ்வு வளத்திற்குப் பயன்படுத்துகிறார்களே தவிர, மக்களின் நலன்களுக்குப் பயன்படுத்துவதில்லை.

**திராவிடத்தில் வடநாட்டின் பிடி**

கலை, மொழி ஆகிய விஷயங்களிலும் வடநாட்டான் பிடியிருக்கிறது. நீங்களே பார்க்கலாம், சென்னை மாகாண ரயில்வேக்களில் பிரயாணஞ் செய்தால், ஸ்டேஷன்களில், முதலாவது இந்தியிலும், இரண்டாவது ஆங்கிலத்திலும் மூன்றாவது தமிழிலும் எழுதியிருப்பதை. தேசீயத் தோழன் சொல்லுகிறான், ஆங்கிலம் உலகப் பொது மொழி - ஆகவே ஆங்கிலமும் கொஞ்ச காலத்திற்கு வேண்டியதுதான். இந்தியாவின் பொது மொழி இந்தி. ஆகவே இந்தியாவின் முதன் மொழி இந்தியாக இருக்க வேண்டும் என்று. இதைத் தமிழன்—திராவிடன் ஒப்புக்கொள்ளலாமா? மாகாண சர்க்கார்களின் அதிகாரத்தைப் பிடுங்கி, தானே சர்வாதிகாரப் போக்கைக் கையாளுகிறது டில்லிசர்க்கார். சென்னை மாகாணத்தில் ரயில்வே, தந்தி, தபால் முதலிய துறைகளில் உள்ள வருமானத்தை எல்லாம் மத்திய சர்க்காருக்குக் கொடுத்துவிட்டு, அடுத்த நாளே மாகாணத்திற்கு வேண்டிய செலவிற்காக மத்திய சர்க்காரிடம் பிச்சை ஏற்கும் இழிந்த நிலைமைக்கு வந்திருக்கிறது.

**அமெரிக்காவிலே நேரு**

நமது மங்களாபுரி மைனர் இருக்கிறாரே பண்டித நேரு. அவர்களுக்கு அமெரிக்கா இன்று வரவேற்பு கொடுக்கிறதென்றால் நாம் களிப்படைய வேண்டியதுதான். ஆனால் எதற்காக இந்த உபசாரம்? நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்தியா கடன் பத்திரத்தில் கையொப்பமிட்டாகிவிட்டது. அடகு வைத்த நிலையிலே பண்டிதர் அமெரிக்க வீதி

[தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க]

### பொருளாதார போதனை!

"தொழில் காரணமாகத் தமக்குக் கிடைத்த அனுகூலத்தை மேல் நாடுகள் பயன்படுத்திக்கொண்டு சக்தியைப் பெருக்கி, ஆசியாவையும் கட்டியாண்டு பெருநிதியும் சேர்த்தன. இவ்வளவும் கொஞ்ச நாட்களுக்குத்தான், இதன் இறுதி அத்தியாயம் இப்பொழுது நடைபெறுகிறது"

—பண்டித நேரு.

# மின்சார மாயவரின் உருப்படாத ஒப்பாரி!

"வகுப்பு உணர்ச்சியும், பொறாமையுமே தற்போது நாட்டில் எங்கும் காணப்படுகின்றன. தேசாபிமான உணர்ச்சி குறைந்துவிட்டது. குற்றம் குறைகளைக் களைந்து தேசத்தை பலப்படுத்த மக்கள் எல்லோரும் ஒன்றுபடவேண்டும்"

என்று சென்னையில், ஆரிய சமாஜ பிரசார சபையின் ஆதரவில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில், தோழர் டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு அவர்கள் பேசியிருக்கிறார்.

எங்கும் வகுப்புணர்ச்சி காணப்படுகிறது; தேசாபிமானம் குறைந்துவிட்டது. இவை தோழர் வரதராஜரின் வாயினின்று சிந்திய முத்துக்கள்! பல ஆண்டுகள் அரசியலில் ஈடுபட்டு அலுத்துப்போய், இன்று ஆரிய மதத்தைக் கட்டியழும் டாக்டரின் அரிய கருத்துரைகள்!

தோழர் வரதராஜர் ஒரு டாக்டர். நோய் நீக்கும் முறைகளைத் தெரிந்தவர். நோய்க்கு மூலகாரணங்களை அறியும் ஆற்றல் படைத்த டாக்டருக்கு, மின்சாரமாயவருக்கு நாட்டின் தற்போதைய நிலையும், அதற்குரிய காரணங்களும் தெரிந்திருக்கும் என்று நாம் எதிர்பார்த்தோம். ஆனால் டாக்டர் பேசியிருக்கும் பேச்சைப் பார்த்தால், அவரது அரசியல் அறிவு எவ்வளவு மழுங்கியுள்ளது என்பதை விளக்குவதாகவே இருக்கிறது.

தேசாபிமானம் குறைந்து விட்டதே என்று ஒப்பாரி வைக்கும் மின்சார மாயவர், எதை தேசாபிமானம் என்று கருதிக்கொண்டு இவ்வண்ணம் பேசியிருக்கிறார் என்பது தான் நமக்குப் புரியவில்லை. இடையிலே கதராடை, கையிலே ராட்டை, காந்தி பஜனை, அதற்குப் பக்கத் துணையாக ஹரிகதா காலக்ஷேபங்கள் ஆகிய இவைதான் தேசபக்தியின் சின்னங்கள் என்று கருதுகிறார் போலும் டாக்டர். அப்படிக் கருதுவாராகில், அவருக்கு நிலைமையை வருந்துவதைத் தவிர வேறு வழியில்லை.

தேசம் விடுதலை பெற்று விட்டது. அதாவது தேசபக்தி அதற்குரிய பலனை அளித்து விட்டது. இந்த நிலையில் எது தேசபக்தியாக இருக்கமுடியும் என்பதை, தேசாபிமானியாகிய டாக்டர் வரதராஜுலு சிந்தித்துப்பார்க்க வேண்டும். இந்த நாட்டில் என்றும் தேசாபிமானத்துக்கோ, தேசாபிமானிகளுக்கோ குறைவே இருந்ததில்லை. அப்படியிருந்தும், டாக்டர் சொல்லுவது போல வகுப்பு உணர்ச்சி அங்ஙனெனுபடி எங்கும் பிரகாசமாகக் காட்சியளிக்கக் காரணம் என்ன? ஜாதிமத வேறுபாடுகள் காரணமாக மனிதாபிமானம் குறைந்து விட்டது. அதனை உணர்ந்து மனிதாபிமானத்தை வளர்க்கத்தக்க சீர்திருத்தப்பணியை மேற்கொண்டவர் யாருமில்லை, சுயமரியாதைக்காரர்களைத்தவிர.

வகுப்பு உணர்ச்சி ஒழியவேண்டுமென்கிறார் டாக்டர். ஆனால் வகுப்புகள் உள்ளதற்குக்காரணம் என்ன என்பதை அறிந்து கொள்ள மறுக்கிறார். அது மட்டுமா? இந்நாட்டில் வகுப்பு வாதத்திற்கு வித்திட்ட ஆரிய ஹிந்து மதத்தின் காவலராக இருந்தும் பணியாற்றுகிறார். மின்சாரம் கண்டு பிடித்த இந்த மின்சாரமாயவரால் ஜாதி பேதங்களை ஒழிக்கத்தக்க மருந்து கண்டுபிடிக்கவில்லை. இப்படிப்பட்ட நிலையிலே, ஏனோ இத்தகைய ஒப்பாரி வைக்கிறார் இந்த மின்சாரமாயவர்?

## ஊருக்கு உபதேசம்!

"சுதந்தர ஊற்றுக்கு அணைபோலி, தடுக்க முயன்றதும் மிதமிஞ்சிய வறுமையுமே அந்த அதிர்ப்திக்கும் கிளர்ச்சிக்கும் காரணம் என்பதை அறிந்துகொள்ளுங்கள். ஆகவே, சுதந்திர உதயத்தைத் துரிதப்படுத்தி வறுமையை ஒழிப்பதே ஆசிய நாடுகளில் அமைதியை நிலைநாட்ட ஏற்ற வழியாகும்."

—பண்டித நேரு.

## யாருக்குத்தான் உரிமை உண்டு!

ஆந்திர கேசரி பிரகாசம்காருவுக்கு ஆந்திர மாகாணப் பிரிவினையில் ஏற்பட்டிருக்கும் ஆவத்தில் அவரது அறிவுப் பிரகாசம்கூட கொஞ்சம் குறைய ஆரம்பித்திருக்கிறது போலும்! "மூவர் கமிட்டி அறிக்கை எந்தவித விசாரணையையும் அடிப்படையாகக் கொண்டதல்ல. தார் கமிட்டி விசாரணை நடத்தி சென்னை நகரைத் தனி மாகாணமாக்கலாம் என்று கூறிய யோசனையைப் புறக்கணிக்க மூவர் கமிட்டிக்கு என்ன உரிமை இருக்கிறது?" என்று கேட்டிருக்கிறார்.

சென்னை நகரை ஆந்திரர் விழுங்கிவிட வேண்டும், அல்லது தமிழருக்குச் சொந்த என்ற நிலை இருக்கக்கூடாது என்பதுதான் ஆந்திரகேசரியாரின் அபிலாஷை. இந்த ஆசையின் விளைவால் தார் கமிட்டி செய்தகர்த தீர்ப்பை எடுத்துக்காட்டி, அதனை மறுக்க மூவர் கமிட்டிக்கு உரிமை ஏது என்று கேட்கிறார். அதாவது தார்கமிட்டியார் சென்னையைப் பொதுவாக்க உரிமை பெற்ற கமிட்டி என்பது ஆந்திரகேசரியாரின் எண்ணம். ஆனால், சென்னையைப் பொதுவென்று கூற தார் கமிட்டிக்குத்தான் என்ன உரிமை இருக்கிறது என்று நாம் கேட்கிறோம். கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைப்பதுபோல சென்னையை வடவர் சுரண்ட இடங்கொடுக்க தார் கமிட்டியார் யார்? தார் கமிட்டி யாரால் ஏற்படுத்தப்பட்டது. தென்னாட்டவருக்கும் தார் கமிட்டிக்கும் என்ன சம்பந்தம்? சென்னை நகரின் எதிர்காலத்தை நிர்ணயிக்க இவர்கள் யார்?

எனவே பிரகாசம்காரும் காணும் கனவு வீண் கனவு சென்னை ஆந்திரருக்குச் சொந்தமல்ல என்பது எவ்வளவு உறுதியான உண்மையோ அவ்வளவு உறுதியும் உண்மையும் சென்னை தமிழருக்கே என்பதிலும்உண்டு எது எப்படியிருந்தபோதிலும் சென்னைப் பொதுவென்னில் பொருந்தாத காற்று என்பதைத் திட்டமாகத் தெரிவிக்க விரும்புகிறோம்.

## விளம்பரம்

ஒருபத்தி ஒருஅங்குலம் ரூ5—0—0
நீண்ட கால ஒப்பந்த விபரங்களுக்குச் சலுகை காட்டப்படும்.

—மானேஜர்

## கிளைக் கழகத் தோழர்களுக்கு

உறுப்பினர் சேர்க்கும் ரசீது புத்தகங்கள் வேண்டும் கிளைக் கழகங்களும், கிளைக் கழகம் இல்லாத ஊர்களிலுள்ள கழக முக்கியஸ்தர்களும், அந்தந்த மாவட்டத்திலிருக்கும் அமைப்புக் குழு உறுப்பினர்களிடம் எழுதிப் பெற்றுக் கொள்ளவும்.

தலைமைக் கழகத்திலிருந்து ரசீது புத்தகங்கள் அமைப்புக் குழு உறுப்பினர்களுக்கு மட்டுமே அனுப்பிவைக்கப்படும். அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் அந்தந்த மாவட்டத்திலிருக்கும் அமைப்புக் குழு உறுப்பினர்களிடம் ரசீது புத்தகங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

உறுப்பினர்கள் சேர்ந்தவுடன் தலைமைக் கழகத்திற்கு அனுப்ப வேண்டிய ரசீதுகளுடன், அந்தந்த ரசீதின் 2 அணாத் தொகையையும், தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும்.

தலைமைக் கழகத்திற்கு ரசீது அனுப்பிவைக்கும் அப்பொழுதே, மாவட்டத்திற்குச் சேர வேண்டிய ரசீதுகளை, மாவட்ட அமைப்புக் குழு உறுப்பினர் முகவரிக்கு அனுப்பவைக்க வேண்டும்.

எந்தெந்த கிளைக் கழகத்திலிருந்து எவ்வளவு ரசீதுகள் தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்ற புள்ளி விபரம், தலைமைக் கழகத்திலிருந்து, அமைப்புக்குழு உறுப்பினருக்கு, திங்கள் தோறும் அறிவிப்புச் செய்யப்படும்.

மாவட்டக் கிளைகள் அமைந்த பிறகு அவைகளுக்குச் சேரவேண்டிய தொகை தலைமைக் கழகத்திலிருந்தே அனுப்பிவைக்கப்படும்.

ரசீது புத்தகங்கள் அனுப்பி வைப்பதில் இன்றியமையாத வகையில் தாமதம் ஏற்பட்டுவிடுகிறது. தோழர்கள் பொறுத்துக் கொள்ள வேண்டுகிறேன். தொடர்ந்து சிறுது சிறிது எண்ணிக்கையில் அனுப்பிவைக்கப்படும்.

என். வி. நடராசன்,
செயலாளர் — அமைப்புக் குழு
தலைமைக் கழகம்

## அமெரிக்காவில் இரும்பு உற்பத்தி

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 1948-ம் ஆண்டில் 88,640,000 டன்கள் எடையுள்ள எஃகு உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. இது உலகில் உற்பத்தியாகும் அளவில் 52 சதவிகிதம் என்று அமெரிக்க இரும்பு எஃகு ஸ்தாபனம் தெரிவிக்கிறது. 1950-ம் ஆண்டு இறுதிக்குள் இந்த உற்பத்தி அளவு 99,000,000 டன்களாக வளரும்.

## சந்தா விவரம்

3 மாதம் சந்தா ரூ 6—0—0
6 மாதம் சந்தா „ 12—0—0
ஒரு வருடசந்தா „ 24—0—0

மூன்று மாதத்திற்கு குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

—மானேஜர்:

## திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

### 29-10-49

ஆனைமலை :— டி. கே. சீனிவாசன்
ஜவநல்லூர் (நாகை) :— ஈ. வெ. கி. சம்பத்

### 30-10-49

நாகை :— இரா. நெடுஞ்செழியன், ஈ. வெ. கி. சம்பத், இராமாமிர்தத்தம்மையார்
தர்மபுரி :— சி. பி. சிற்றரசு
பொன்னிரை :— டி. கே. சீனிவாசன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி
மம்சாபுரம் :— எம். எஸ். ராமசாமி
ஜலகண்டபுரம் :— மு. கருணாநிதி, ப. கண்ணன்.

## வயிற்றுக்குப் போதவில்லை என்றால் வரவு இல்லை என்ற காரணம் கூறுவதா?

சென்னை நகரசபையில் வேலை செய்பவர்களின் சம்பளம், வாழ்க்கையை நடத்துவதற்குப் போதியதாக இல்லாமலிருக்கிறதென்றும் காரணம் காட்டி அவர்கள் செய்துகொண்ட விண்ணப்பத்தின் மீது அவர்களுடைய சம்பளம், படி ஆகியவைகள் உயர்த்தப்படவேண்டுமென்று சென்னை நகரசபை முடிவு செய்திருக்கிறது.

சென்னை நகரசபையின் மொத்த வருமானம் ஓர் ஆண்டுக்கு 197 லட்சம் ரூபாயாகிறது. இப்போதைய நிலைமைப்படி, கார்ப்பரேஷன் ஊழியர்களுக்குச் சம்பளவகைக்காக 106 லட்சம் ரூபாய் செலவாகிறது. நகரசபைத் தன் கடனுக்காகக் கொடுக்க வேண்டிய வட்டி முதலிய இனங்களுக்காகவென்று 28 லட்சம் ரூபாயும்போக, நகரமக்களின் நன்மைக்காகச் செலவிட 32 லட்சம் ரூபாய்தான் மிஞ்சுகிறது. இந்நிலையில், சென்னை நகரசபை, ஊழியர்களுக்குச் சம்பளம் உயர்த்தினால் இவ்வகையில் 48 லட்சம் ரூபாய் வேண்டியிருக்கும். இதை எப்படிச் சமாளிப்பது!

சென்னை நகரசபைத் தன் நிர்வாக அளவைப் பெருக்கிக் கொண்டிருக்கிறது என்றே கூற வேண்டும். 5 பேர் செய்யும் வேலைக்கு 10 பேர் இருக்கும் வகையில் உள்ள இனங்களைக் குறைத்தும், ரூ. 500-க்கு மேல் சம்பளம் வாங்கும் அதிகாரிகளுக்குச் சம்பளத்தைக் குறைத்தும், மேலதிகாரிகள் என்ற பெயரால் பலரை வேலைக்கு வைத்திருப்பதை ஒழித்தும் தேவைக்குத் தக்கவாறு சிலரைக்கொண்டு, ஒழுங்கான முறையில் வேலை வாங்கும் நடைமுறையைக் கைக்கொண்டும், நகரசபையின் வருமானத்துக்குரிய இனங்களை சென்னை அரசாங்கத்திடமிருந்து வாங்கியும், ஏழை மக்களைப் பாதிக்காத வகையில் புதிய வருமானத்திற்குரிய திட்டங்களை வகுத்தும் வருவாயைப் பெருக்கிக்கொள்ள வேண்டுமே தவிர, அதனால் அரை பட்டினிச் சம்பளம் கொடுத்து, ஊழியர்களை வருத்துவதென்பது நியாயமாக முடியுமா? வருமானமில்லை என்று கூறி அரைபட்டினிச் சம்பளம் தருவதா?

## குற்றங் கண்ட...

[3 பக்கம் தொடர்ச்சி]

களிலே வலம் வருகிறார்! இன்னும் சில வருடங்களில் அம்மாக்களின் தேசீயக் கொடி டெல்லியிலே பறக்கப் போகிறது. இந்தியா வாடும் போது, வகையான ராஜ்ஜா பசாரங்கள் தூதுவர்களுக்கும் மந்திரிகளுக்கும் நடக்கின்றன! உலகத்தின் பார்வையில் இந்தியா ஒரு பெரிய குபேர நாடு என்றுகாட்டுவதற்குச் செய்யும் இந்தப் பிரயத்தனங்கள் எத்தனை நாளைக்கு நிலைத்து நிற்கப் போகின்றன!

கிருஷ்ண மேனன். பண்டிதரின் நண்பராம். அவர் இன்று இந்தியாவின் ஹை கமிஷனர், ரூ 6000 சம்பளம்! காரவகைகள் ஏராளம்! இந்திய காரியாலயத்திலேயே, முன்னாள் வைஸ்ராயாக விருந்தளிக்கப்பட்டன மக்களைப் பதவிக்கு வைக்கப் போகிறார்களாம்! பொதுவுடைமை நாட்டிலே— ரஷ்யாவிலே பண்டிதரின் சகோதரி தூதுவராயிருந்தார். ஒரு நாள் அம்மையார் தம் அண்ணனுக்குக் கடிதம் தீட்டினார். ஒரு நாள்கூட ஸ்டாலினை என்னால் பார்க்க முடியவில்லை, நான் அமெரிக்கா விற்குப்போகவேண்டுமென்று அண்ணன் அருள் கூர்ந்தார். அம்மையும் அமெரிக்காவிற்குச் சென்றார் வேடிக்கையைக் கவனியுங்கள், இன்றைய நேருவின் குடும்பத்தினரால் ஆட்சி செய்யப்படுகிறது. எனவே, மேட்டுக் குடியினரான அவர்கள் கண்களுக்குத் தரித்திர இந்தியா—பஞ்சை விவசாய நாடு கண்களுக்குத் தெரிவதில்லை!"

இந்நேரம் மழை அதிகமாகவே இளமவழுதி அவர்கள் தன் பேச்சை முடித்துக் கொண்டார். பின் தலைவரின் சுருங்கிய முடிவுரையுடன் கூட்டம் 8-மணிக்கு இனிது கலைந்தது. (வி—உ)

# வேண்டுகோள்கள்

—(0)—

## சென்னைத் தோழர்களுக்கு

சென்னை மாவட்டத்தில், இதுகாறும், வட்டவாரியாக திராவிட முன்னேற்றக் கிளைக் கழகங்களின் அமைப்புகள் ஏற்படுத்தியது போக, எஞ்சியுள்ள வட்டங்களிலும் அதிவிரைவில் கழகங்களை அமைத்து விட வேண்டுகின்றேன். வட்டக்கழகங்களை அமைக்கின்ற தோழர்கள், இரண்டு, மூன்று வட்டங்களையும் ஒன்றுகச்சேர்த்து ஒரு கழகம், அமைப்பது என்ற முறையில் அல்லாமல், வட்டவாரியாக, வட்டத்திற்கொரு கழகம் என்ற முறைப்படியே அமைக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். ஒவ்வொரு கழகத்தினின்றும், மாவட்டக் கழக நிர்வாகக் குழுவிற்கென இரண்டு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து, அவர்களின் பெயர்களை முழு விலாசத்துடன் குறிப்பிட்டெழுதி, மாவட்டக் கழக அலுவலகத்திற்கு அனுப்பவும். நவம்பர் இரண்டாவது வாரத்தில், மாவட்டக்கழக, நிர்வாகக்குழு கூடி, நிர்வாகிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டியிருப்பதால், அதற்குள், அங்கத்தினர் சேர்த்தல், கழகங்கள் அமைத்தல், மாவட்டக்கழகத்திற்கென, இரண்டு பிரதிநிதிகளைத்தேர்ந்தெடுத்தல் ஆகிய காரியங்கள் மிக துரிதமாக நடைபெற வேண்டுமென, இயக்கத்தோழர்களை வணக்கமாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கே. கோவிந்தசாமி,
அமைப்பாளர்,
சென்னைமாவட்ட தி. மு. கழகம்
2/45 முத்துமாரி செட்டி தெரு,
மண்ணடி, சென்னை.

## கோவைத் தோழர்கட்கு

திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் சேர்க்கும் புத்தகம், நகரில் எல்லாவட்டாரங்களிலும் உள்ள கழகத் தோழர்களிடையே கொடுக்கப்பட்டிருக்கிறது. நகரில் உள்ள தோழர்கள் உடனடியாக ஆங்காங்கு உறுப்பினர்களாகப் பதிவு செய்து கொள்வதுடன், வசதிப்படாத தோழர்கள் பிரதி ஞாயிற்றுக் கிழமைகளில் கழகக் காரியாலயத்தில் வந்து பதிவு செய்து கொள்ளவும். கிளைகள் உள்ள வட்டாரத்தில் உள்ள தோழர்கள், அந்தந்தக் கிளைகள் மூலமே பதிவு செய்துகொள்ளவும்.

எஸ். ஏ. ராஜமாணிக்கம்
செயலாளன் கோவை நகரக்கிளை

## இராமநாதபுரம் மாவட்டத் தோழர்களுக்கு

இராமநாதபுரம் மாவட்டத்தில், ஆங்காங்கு கிளைக் கழகங்கள் அமைத்து அதன் நிகழ்ச்சியைத் தலைமைக்கழக அலுவலகத்திற்குத் தெரிவிக்க வேண்டுகிறேன். உறுப்பினர் சேர்க்கும் ரசீது புத்தகங்கள் வேண்டும் கிளைக்கழகத் தோழர்கள் எவ்வளவு வேண்டும் என்று தெரிவித்தால், அந்தக் கணக்குப்படி, ரசீது புத்தகங்கள் வரவழைத்து அனுப்பிவைக்க வசதியாக இருக்கும். ரசீது புத்தகங்கள் வந்தவுடன் முன்பே கேட்டுள்ள தோழர்களுக்கு அனுப்பி வைக்கிறேன். தாமதத்திற்கு பொறுத்திடுக.

எம். எஸ். ராமசாமி
அமைப்புக்குழு உறுப்பினர்—
இராமநாதபுரம் மாவட்டம்

## தஞ்சை மாவட்டத் தோழர்களுக்கு

தஞ்சை மாவட்டத்தில் கிளைக் கழகங்கள் அமைக்காத சிற்றூர்களிலும், நகரங்களிலும் உடனடியாக அமைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். உறுப்பினர் சேர்க்கும் ரசீது புத்தகங்கள் வேண்டும் கிளைக் கழகச் செயலாளர்கள் என்னுடைய முகவரிக்கு (கே. கே. என், பஞ்சுக்காரத் தெரு, குடந்தை) எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். ரசீது புத்தகங்கள் கொஞ்சம் கொஞ்சமாக வருவதால், கிளைக்கழகங்களின் தேவையை அறிந்து வைத்துக்கொண்டு, அதற்கேற்றாற்போல் தொடர்ந்து அனுப்பி வைக்கிறேன். தஞ்சை மாவட்டம் உறுப்பினர் சேர்ப்பதில், முன்னணியில், என்றும்போல் நிற்கும் என்பதை எடுத்துக்காட்ட, விறுவிறுப்புடன் முன்னேற்றக்கழகத் தோழர்கள் பாடுபட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்

இங்ஙனம்
கே. கே. நீலமேகம்
அமைப்புக் குழு உறுப்பினர்—
தஞ்சை மாவட்டம்

## கோவை மாவட்டத் தோழர்களுக்கு

கோவை மாவட்டத் திராவிட முன்னேற்றக் கழகம் அமைக்க வேண்டியிருப்பதால், கோவை மாவட்டத்தைச் சேர்ந்த ஒவ்வொரு கிளைக் கழகமும் இரண்டு பிரதிநிதிகள் வீதம் தேர்ந்தெடுத்து, மாவட்டக் கழகத்திற்கு அனுப்பிவைக்கவும். 6—11—49-ம் நாள் காலை 10 மணிக்குக் கோவை நகர திராவிட முன்னேற்றக் கழகக் கட்டிடத்தில், மாநில திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் தோழர் சி என். அண்ணாதுரை தலைமையில் நடைபெற இருக்கும் மாவட்டக்கழக அமைப்புக் கூட்டத்திற்கு எல்லாத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களும் தவறாது வந்து சேர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

தி வெங்கடாசலம்
அமைப்புக் குழு உறுப்பினர்
கோவை மாவட்டம்

## திருச்சி மாவட்டத் தோழர்களுக்கு

திருச்சி மாவட்டத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் கிளைகள் அமைக்கப்படாத ஊர்களில் உடனே கிளைகளை அமைக்க வேண்டுகிறேன். கிளைகள் அமைந்தவுடன, மாவட்டக் கழகம் அமைக்கப்பட வேண்டியிருக்கிறது. மாவட்டக் கழக அமைப்பு நாள் பின்னால் அறிவிக்கப்படும். அதற்குள் ஒவ்வொரு கிளைக்கழகமும் இரண்டு, இரண்டு பிரதிநிதிகள் வீதம் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டுகிறேன். உறுப்பினர் சேர்க்கும் ரசீது புத்தகங்களை எனது முகவரிக்கு (ஜி. பராங்குசம், என். எஸ். பங்களா. காஜாமியாப் பார்க், தெப்பக் குளம போஸ்ட், திருச்சி) எழுதிப் பெற்றுக்கொள்ளலாம் தேவையை எழுதினால், தலைமைக் கழகத்திலிருந்து புத்தகங்கள் வரவர அனுப்பிக்கொண்டேயிருக்க வசதியேற்படும்.

ஜி. பராங்குசம்
அமைப்புக் குழு உறுப்பினர்—
திருச்சி.

## மதுரை மாவட்டத் தோழர்களுக்கு

மதுரை மாவட்டத்தில் ஆங்காங்கு கிளைக் கழகங்கள அமைத்து, உறுப்பினர் சேர்க்கும் பணியில் ஈடுபடும்படி கழகத் தோழர்களைக் கேட்டுக் கொள்கிறேன். மதுரை மாவட்டத்தைப் பொறுத்த வரையி லுள்ள கிளைக் கழகச் செயலாளர்கள், எனது முகவரிக்கு (எஸ். முத்து, அழகரடி. மதுரை) எழுதிப் பெற்றுக் கொள்ளவும். அண்ணா அவர்கள் டிசம்பர் அல்லது ஜனவரி திங்களில மதுரை மாவட்டத்தில் சுற்றுப் பிரயாணம் செய்வார்கள். அதுபோது, மதுரை மாவட்டத்தின் பல ஊர்களுக்கும் வருவார்கள். அதுவரையில பொறுத்திருக்க வேண்டும் என்றும், மற்றக் கழகப் பிரசாரகர்களை அழைத்து கூட்டம் ஏற்பாடு செய்யுங்கள் என்றும் மிகப் பணிவாகக் கேட்டுக்கொள்கிறேன்,

எஸ் முத்து
அமைப்புக் குழு உறுப்பினர்—
மதுரை மாவட்டம்

## காந்தியப் பொருளாதாரம்!

★

“சென்ற இரண்டு மூன்று நூற்றாண்டுகளில் சில மேலை நாடுகள் தொழில் துறையில் முன்னேறிவிட்டன. ஆசிய நாடுகளோவெனில் பழைய படியே விவசாய நாடுகளாக உள்ளன. இதுதான் வித்தியாசம்.”

—பண்டித நேரு.

## உரிமை பறிக்கப்படுகிறது

குன்னூர், அக். 26—
“உமைலை பிரங்கி”யில் ‘கிருத்துவ மத ஊழல்கள்’ என்ற கட்டுரை எழுதியதற்காகத் தோழர் விஸ்வநாதன் யாதொரு விசாரணையுமின்றி வேலையினின்றும் நீக்கப்பட்டு விட்டார். மேலும் 14-11-49ல் சென்னையில் வழக்கு நடக்கப்போகின்றது. எழுத்துரிமை பறிக்கும் படலம் இப்படியெல்லாம் விரிந்து செல்கின்றது. இன்னும் எந்தெந்த அளவுக்கெல்லாம் விரிந்து செல்லுமோ, நினைக்கவே, வேதனை மிகுகிறது. (ஓ-தி)

# தென்னாட்டின் மீது மாற்றாந்தாய் அன்பா?

இந்தியா, உலக பாங்கியிலிருந்து முன்னர், இரு முறையாக 440 லட்சம் டாலர்கள் கடன் வாங்கியிருப்பது அனைவருக்கும் தெரியும். இப்போது மீண்டும் 250 லட்சம் டாலர்களைக் கடன் வாங்குவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது. உலக பாங்கின் தலைவர், 3-வது முறை கடன் தருவதற்கு ஏற்பாடு செய்கிறார் என்று தெரிகிறது. இந்தத் தொகை தாமோதர் பள்ளத்தாக்கில், மின்சார உற்பத்தி நிலையம் அமைப்பதற்காகவே கேட்கப்பட்டிருக்கிறது.

நாட்டிற்குப் பெருந்தொகை கடன் வாங்கப்படுகிறது. அதே சமயத்தில் உள் நாட்டிலே, மத்திய அரசாங்கத்தின் செலவில் 80 கோடி ரூபாய் குறைப்பதென்று முடிவு செய்யப்பட்டுவிட்டது. இவ்வருட இந்தியாவின் முதலீட்டுக் கணக்கின் மொத்தத் தொகை ரூ. 210 கோடியிலிருந்து 130 கோடிக்கு இதனால் குறைந்துவிடும். அகில இந்திய கட்டாய சேமிப்பு மூலம் மாதாமாதம் ரூ. 40 கோடி மீதமாகத் திட்டமிடப்படுகிறது.

இவ்வளவிருந்தும், சென்னை மாகாணம் கேட்ட 6 கோடி ரூபாய் கடன் தரப்படவில்லை. சென்னை மாகாணத்தில் பல நல்ல வளர்ச்சித் திட்டங்களிட்டு வேலை செய்யப் பணமில்லை என்றகூச்சரால், அமைச்சர்களிருக்கும் திக்கிலிருந்து எழுந்த வண்ணமாக இருக்கின்றன.

இவ்வாறு சென்னை மாநில கோரிக்கை நிறை வேற்றப்படாததிலிருந்து, தென்னாடு அசட்டை செய்யப்படுகிறது என்று கருதுவதா? இந்தியா முன்னேற வேண்டுமானல், வலிமையுடைய நாடாக இருக்க வேண்டுமானல், தென்னாடு இல்லாமலே காரியம் நிறைவேறிவிடும் என்பது வட நாட்டவர் கருத்தா? தென்னாடு இவ்வாறு அசட்டை செய்யப்படுவதனாலும், வட நாட்டிலே பொதுவாகத் தென்னாட்டவர் தக்க மரியாதையுடன் நடத்தப்படுவதில்லை என்ற நிலைமை ஏற்பட்டிருந்தாலும், இந்த நிலைமைகளைப் போக்க, இந்திய அரசாங்கம் இப்போது வாங்கும் கடனில் பெரும் பகுதியையோ தென்னாட்டின் வளர்ச்சித் திட்டத்திற்குப் பயன்படுத்தும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

முதலில் வாங்கிய கடன்ரயில்வே வளர்ச்சிக்கென வாங்கப்பட்டது. அந்தத் தொகை வாங்கப்பட்டவுடனே, தென்னாட்டில், முன்னரே போடப்பட்டிருந்த பல வளர்ச்சித் திட்டங்கள்கூட, “பணமில்லை” என்று கூறப்பட்டு உடனடியாக நிறுத்த வேண்டும் என்று உத்தரவுபிறப்பிக்கப்பட்டது. இதன் பயனாக, தென்னாட்டில் பழைய ரயில்வே ஸ்டேஷன்கள் புதுப்பிக்கப்படுவதோ, மாற்றிடமைக்கப்படுவதோ, புதிய பாதைகள் போடுவதோ, ரயில் வண்டிகளைப் புதுப்பித்தமைப்பதோ முடியாதென்ற உத்தரவுதான் இந்திய அரசாங்கத்திடமிருந்து தென்னாடு பெற்றது.

இரண்டாவது வாங்கிய கடன் பயிர்த்தொழிலை வளர்ச்சி செய்வதற்கெனவாங்கப்பட்டது. ஆனல், தென்னாட்டில் பயிர்த்தொழில் வளர்ச்சிக்கோ, தரிசு நிலங்களைப் பயிராகும் நிலங்களாக மாற்றியமைப்பதற்கோ, இயந்திர சாதனங்களைப் பயன் படுத்திப் பயிர்த்தொழிலைப்பெருக்குவதற்கோ பண உதவி செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

மூன்றாவதாக வாங்கப்போகும் கடன் தொகை தாமோதர் ஆற்றுப் பள்ளத்தாக்கில், மின்சார உற்பத்தி நிலையம் அமைப்பதற்காக என்று வாங்கப்போகின்றனர். முதலில் வாங்கப்பட்ட கடன் தொகையிலேயே சென்னைமாநிலம் பயன்பெற முடியவில்லை என்றால், இந்த 3-வது கடன் தொகையிலிருந்து குறிப்பிட்ட ஒரு செயலுக்கென வாங்கப்படுமகடன்மட்டும் சென்னை மாநிலத்திற்கு எதற்கு பயன்படப்போகிறது? இத்தொகையிலிருந்து சென்னைமாநிலம் எதிர்பார்ப்பது வெறும் கேலிக் கூத்தாகவே இருக்கும்.

## ஆதிக்க நோயின் ஆரம்பம்!

ஆசிய சுதந்தரத்துக்கும் இன சமத்துவத்துக்கும் இந்தியா பாடுபடுவதானது அதன் சரித்திரம், பூகோள அமைப்பு ஆகியவற்றால் தவிர்க்க முடியாது போய்விட்டது. வேறு எந்த நாட்டின் மீதும் ஆதிக்கம் செலுத்தவோ, தலைமை தாங்கவோ இந்தியா விரும்பவில்லை. ஆசியாவின் இந்த அடிப்படைப் பிரச்னைகள் தீராதவரை உலக சமாதானம் இல்லை என்னும் திட நம்பிக்கை காரணமாகத்தான் ஆசியாவிலும் உலக விவகாரங்களிலும் நாங்கள் உரிய பங்கு கொள்ள நேர்ந்தது.”

—பண்டித நேரு.

## எதிர்ப் புரட்சி!

நம்நாட்டில் தொழிலாளர் துயர் நீங்க வழியில்லாவிட்டாலும், புதிது புதிதாகத் தொழிற்சங்கங்கள் முளைத்தெழுவதில் மாத்திரம் குறைவே யில்லை. “அகில இந்திய தொழிற்சங்கம்” என்ற ஒரு ஸ்தாபனம் நெடுங்காலமாகப் பயனுள்ளபணியாற்றி வரும்போது, அதனோடு போட்டியிட இந்திய தேசிய தொழிற்சங்கம் என்ற பெயரில மற்றொரு தொழிற் சங்கத்தை உண்டுபண்ணினர் காங்கிரசார். இது அகில இந்திய தொழிலாளர் விஷயம் பற்றிய செய்தி. இதேபோல், சமீபத்தில் சென்னை மாகாணத்தைப்பொருத்தவரையில், ஒருபுதுத்தொழிற்சங்கத்தைத் தோன்றச் செய்திருக்கின்றனர் சிலர். இதற்குப் பெயர், சென்னை மாகாண ஐக்கிய தொழிற்சங்கமாம். இத் தொழிற்சங்கத்தின் ‘ஆரம்ப விழா’ கடந்த 23-ம் தேதி, சென்னை சௌந்தர்ய ஹாலில ஆரம்பமாயிற்று. ஆனால கூட்டம ஆரம்பமான போதே, குழப்பமும் ஆரம்பமாகி விட்டது. “கருங்காலிகள் ஒழிக” “புரட்சி ஓங்குக!” என்ற ஒலிகள் எழுப்பப்பட்டன. போலீசார் வந்து அமைதியை நிலைநாட்டிய பிறகு கூட்டம் நடந்தது. இத்தகைய எதிர்ப் புரட்சிகள் நடக்கும் வரை தொழிலாளர் நிலை எப்படி உயர முடியும்!

# துவக்க விழாப் பொதுக் கூட்டங்கள்

## இனி நடப்பவை

திருப்பூர்— 30-10-49 ஞாயிற்றுக்கிழமை மாலை 6-மணிக்கு 8/20 எண்ணுள்ள இடத்தில், தோழர் வி. பொன்னு அவர்கள் தலைமையில், தி. மு. இ. கழகக் கூட்டம் நடைபெறும். அதுபோது எம் என். அண்ணு, ஏ. அரசன் ஆகியோர் பேசுவார்கள். பொதுமக்களும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

* * *

திருவொற்றியூர்—திராவிட முன்னேற்றக்கழகம் திருவொற்றியூர்க் கிளையின் துவக்க விழா 3-11-49 வியாழனன்று மாலை 5-30 மணிக்குத் திருவொற்றியூர் சன்னதித் தெருவில நடைபெறும். தோழர் டி. சண்முகம் அவர்கள் தலைமையில், தோழர்கள் சி. என். அண்ணாத்துரை, கே. ஏ. மதியழகன், காஞ்சி மணிமொழியார் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

* * *

ஈரோடு—8-11-49 செவ்வாய் மாலை 6-30 மணிக்கு திராவிட முன்னேற்றக் கழகத்துவக்கவிழாக் கூட்டம் காரைவாய்க்கால் மைதானத்தில், தோழர் எஸ். ஆர். சந்தானம் அவர்கள் தலைமையில் நடைபெறும். தோழர் சி. என். அண்ணாத்துரை அவர்கள் சொற்பொழிவாற்றுவார்.

* * *

ஜலகண்டபுரம்— தி. மு. கழகப் பொதுக்கூட்டம் ஜலகண்டபுரம் 30—10—49 ஞாயிறன்று மாலை 6 மணிக்கு நடைபெறும். தோழர்கள் மு. கருணாநிதி, ப. கண்ணன் ஆகியோர் சொற்பெருக்காற்றுவார்கள்.

* * *

புதுக்கோட்டை—இவ்வூர் திலகர் மைதானத்தில், 3—11—49 வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு தி. மு. கழகப் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் சி. பி. சிற்றரசு, மு. கருணாநிதி ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

அன்று காலையில் நடைபெறும் தோழர்கள் து. கணேசன்—செல்லம்மாள் திருமணத்தில், தோழர்கள் பெரியண்ணன், சி.பி.சிற்றரசு, மு. கருணாநிதி, முருகு சுப்பிரமணியம் ஆகியோர்சொற்பொழி வாற்றுவார்கள்.

* * *

மதுரை— தி. மு. க-மதுரை நகரக்கிளையின் செயற்குழுக் கூட்டம் தெற்கு வாசல் தாலமுத்து-நடராசன் நினைவுப் படிப்பகத்தில் 30—10—49 ல் நடைபெறும். நகரக்கிளையின் அலுவலகத்திற்கென்று இடம் அமைப்பது பற்றியும், மற்றும் பல முக்கிய விஷயங்கள் பற்றியும் முடிவு செய்ய வேண்டியிருப்பதால், செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

* * *

சென்னை— சென்னை மாகாண கைத்தறி நெசவுத் தொழில்பாதுகாப்பு மாநாடு, தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க ஆதரவில் 13—11—49 ம நாள் சென்னையில் தோழர் வி. எஸ். சங்கர சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெறும். சென்னைப் பிரதமர் தோழர் பி. எஸ். குமாரசாமியார் கலந்து கொள்கிறார். விபரங்கட்கு அமைச்சர்கள் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் 33, அரண்மனைக்காரன் தெரு சென்னை,1. என்ற முகவரிக்கு எழுதவும்.

* * *

சென்னை—18 வது வட்டம்— தி. மு. க—புளியந்தோப்புக் கிளையின் மாதாந்திரக் கூட்டம் 30-10-49 ஞாயிறு பிற்பகல் 1மணி அளவில் நடைபெறும். உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## ஆற்காடு

ஆற்காடு, அக். 23—

தோழர் மதியழகன், பி. ஏ. (மா. கலைவர்) அரங்கண்ணல் காஞ்சி. இராசகோபால் ஆகிய இவர்கள் மாலை 5-30 மணிக்கு ஆற்காட்டிற்கு வந்து சேர்ந்தார்கள். அனைவர்க்கும் காந்தி பவானில் தேநீர் விருந்து அளிக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் குறிப்பிட்டபடி “பெரியார்” மைதானத்தில் கூட்டம் நடத்தப்பட்டது. இதற்கு பல்லாயிரக் கணக்கில் உள்ளூர் மக்களும், வெளியூர் மக்களும வந்திருந்தனர். மழை பலமாய் பெய்ய ஆரம்பிக்கவே கூட்டத்தை, “வன்னியகுல க்ஷத்திரிய” சங்கத்திற்கு மாற்றப்பட்டது. தோழர் தர்மலிங்கம் அவர்களை கூட்டத்திற்குத் தலைமை வகிக்குமாறு தோழர் மணிஎழிலன் அவர்கள் முன்மொழிந்தார். தோழர் நடராஜன் அவர்கள் வழிமொழிந்தார்.

### சி. இராசகோபால்

முதலில் காஞ்சிபுரம் முனிசிபல் கவுன்சிலர் தோழர் சி. இராசகோபால் அவர்கள் சுருக்கமாயும், விகடமாயும்தான் அண்ணாவுடன் சுற்றுப்பிரயாணம் செய்தபோது கண்ட அமோகமான வரவேற்பின் காட்சியையும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப் போராதரவு எங்கும் இருக்கும் தன்மையையும் எடுத்துக் கூறி, திராவிட முன்னேற்றக் கழகத்தில் அனைவரும் உறுப்பினர்களாய்ச் சேரும்படி கேட்டுக்கொண்டார்.

### அரங்கண்ணல்

அடுத்துத் தோழர் அரங்கண்ணல் அவர்கள் பேசினார். “பெரியார் கொள்கைக்கு ஊறு உண்டானது பெரியாரின் திருமணம் தான் பெரியாரிடம் தூது சென்றும், கெஞ்சியும் ‘கண்ணீர்த் துளிகள்’ சிந்தியும் பாவும் விழலுக்கு இறைத்த நீர் போலாயிற்று. கொள்கையை வாரிசுக்கு அடகு வைத்து, சர்வாதிகாரமும் தன்னலமும் தலைகாட்டிப் பொதுநலப் பணிக்கு முட்டுக்கட்டை போடக் கூடாதென்பதும், பெரியாருடன் சேர்ந்து, பணியாற்றுவதன் மூலம் நம்முடைய பல்லாண்டு தொண்டின் சிறப்பை இழந்துவிடக் கூடாது என்பதும் நம்மைப் புதிய கழகம் காணச்செய்தன. பெரியாரால் ஏற்படும் இன்னல்களையும், இழிவு சொற்களையும்,இடையூறுகளையும் பொருட்படுத்தாமல், தண்ணீர் மேலுள்ள பாசையை நீக்குவதுபோல் நீக்கி, நம்முடைய இலட்சிய கோட்பாடுகளில் வெற்றி காண வேண்டும், கொள்கையை விட்டுகொடுக்காமல்,குறிக்கோளை மறவாமல், பகைமையைப் பாராட்டாமல், பழைமைக்கும் - பாசத்திற்கும் சம்பட்டி அடி கொடுக்கவே திராவிட முன்னேற்றக் கழகம் தோற்றமளித்துள்ளது.”

### கே. ஏ. மதியழகன்

பின்னர் தோழர் மதியழகன் அவர்கள் “பெரிய சீன்” தொண்டும், அவரது பிரசாரமும், அவரது போதனையும் இன்று அவராலேயே சீர்குலைக்க ஆரம்பமாயிற்று என்றும் அதைப்பற்றி தோழர் அரங்கண்ணல் எடுத்துக் காட்டியதைத் தானும் விளக்கமாயும், அழுத்தம்திருத்தமாயும் மக்களுக்கு எடுத்துக்காட்ட வேண்டியவனாக இருக்கிறேன் என்றும் கூறி, வாலிப உள்ளங்களுக்கு உணர்ச்சியை ஊட்டினார். கடைசியில் கேள்வித்தாள்களுக்கு ஏற்ற முறையில் பதில் கூறினார்.

தோழர் மணி எழிலன் அவர்கள் நன்றி கூற, “திராவிட நாடு திராவிடருக்கே” என்ற வீர ஒலியோடு துவக்கவிழா இரவு 10-15 மணிக்கு இனிது முடிந்தது. (வி-உ)

## மாயவரம்

மாயவரம், அக். 18—

16-10-49 இரவு 8-மணிக்கு திராவிட முன்னேற்றக் கழக—மாயவரம் கிளையின் கட்டிடத் திறப்பு விழா நடைபெற்றது. தோழர் இரா. சி. வேல்முருகன் “வளமார் எமது திராவிட நாடு” என்ற நாட்டுப்பண் பாடினார் தோழர் ஆர். பழனிச்சாமி கொடியேற்றுவித்தார். தோழர் வை. மாணிக்கம் விழாவிற்குத் தலைமை வகித்தார். தோழர் கோ. சௌந்திராசன் பேசினார். தோழர் நீ ப. நாதன் நன்றிகூறலுடன் விழா இனிது முடிந்தது.

17-10-49 மாலை 7-மணிக்கு மாயவரம் சுயராண்மைக் கழகப் பூங்காவில், திராவிட முன்னேற்றக் கழகத் துவக்கவிழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் செ ராமசாமி தலைவரை பிரேரபித்தார். தோழர் ஆர். பழனிச்சாமி தலைமை வகித்தார். தோழர்கள் தில்லை-வில்லாளன், இரெ. இளம்வழுதி, டி. கே. சீனிவாசன் ஆகியோர் பேசினார்கள். தோழர் இளம்வழுதி அவர்கள் பேசிய பொழுது நகரின் பல பகுதிகளிலும் மின்சாரவிளக்கு அணைந்து விட்டது. கூட்டத்தில் ஒலி பெருக்கியில்லாமலும், விளக்கொளியில்லாமலும் இருந்தபோதிலும் கூட, இடைவிடாது பேசிய இளம்வழுதியின் உணர்ச்சி மிக்கப் பேச்சை அமைதியுடனும், ஆர்வத்துடனும கூட்டத்தினர் கேட்டிருந்தனர்.

தலைவரின் அறிக்கையை மீறிக கூட திராவிடர் கழகத் தோழர்கள் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது. பின்னர் தலைவர் முடிவுரையுடனும், செயலாளர் நன்றிகூறலுடனும், கூட்டம் இனிது முடிந்தது. (வி.உ)

## திசையன் விளை

திசையன் விளை, அக். 24—

23 10-49 ஞாயிற்றுக்கிழமை திசையன்விளை திராவிட முன்னேற்றக் கழகத் துவக்கவிழா, மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. காலை 9 மணிக்கு கழகக் கட்டிடத்தில் தோழர் ஒ. எஸ். சாலிச அவர்களால் கொடி யேற்றப்பட்டது. மாலை 6 மணிக்குத் தோழர் எம. இ. முத்து அவர்கள் தலைமையில் சக்தி அம்மன் கோவிலுக்கு மேற்புறமுள்ள மைதானததில ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் நகர் சேவில தோழர் எஸ். வன்னியப் பெருமாள் அவர்களும், தூத்துக்குடித் தோழர் எஸ். நடராசன் அவர்களும முறையே திராவிட முன்னேற்றக் கழகப்பணி, தறகால அரசியல் நிலை என்பவைபற்றி நீண்டசொற்பொழிவாற்றினர் தலைவர் முடிவுரைக்குப்பின், செயலாளர் தோழர் கே. பி. தேசிகன் நன்றி கூறக் கூட்டம் இரவு 10 மணிக்கு இனிது முடிந்தது (வி-உ)

## கடையநல்லூர்

கடையநல்லூர், அக். 22—

கடையநல்லூர் திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழா 20—10—49 அன்று இரவு 8-மணிக்கு இவ்வூர் தினசரி சந்தைப்பக்கம் நடந்தது.

கோவில்பட்டி நகரசபைத் தலைவர் தோழர் ஈ. வெ. அ. வள்ளிமுத்து அவர்கள், விழாவிற்குத் தலைமைவகித்து சில கூறினார். அவர் கூறியதாவது:

“கொள்கையே பெரிதெனக் கொண்டு பல இன்னல்களையும் பொருட்படுத்தாது, இயக்க வளர்ச்சிக்காக பாடுபட்ட தோழர்களின் மேல் நம்பிக்கையில்லை என்று சொன்னதும், கழக இலட்சியத்திற்கு முரணாக, ஏற்பாடு என்று சொல்லி, பொருந்தாத் திருமணம் செய்துகொண்டதும் பிடிக்காத காரணத்தால்தான் நாங்கள் வெளியேறி, இன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழகம் தோற்றுவித்திருக்கிறோம். ஆகவே பொது மக்கள் அனைவரும் கழகத்தை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

அடுத்து உள்ளூர் தோழர்களான எஸ். ஆர். செயலழகன் அவர்களும், ஆ. திராவிடமணியவர்களும், எம். முகம்மதலி அவர்களும் பேசும்போது நாலரை கோடி திராவிட மக்களையும் அரசியல், பொருளியல், சமுதாய இயல் ஆகிய மூன்றிலிருந்தும் விடுவிக்க தீவிரத் திட்டங்களுடன் தோன்றியுள்ள முன்னேற்றக் கழகத்தை அனைவரும் ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள்.

கடைசியாகப் பேசிய அருப்புக்கோட்டைத் தோழர் எம. எஸ. இராமசாமி அவர்கள், தென்னாட்டை வடநாடு எந்தவிதத்தில சுரண்டுகிறது என்பது பற்றியும; தென்னாட்டின் மீது இலக்கண மற்ற இந்தி மொழியைப் பலாத்காரமாக நுழைக்க முயற்சிக்கும் இந்தி வெறியர்களின் போக்கைப் பற்றியும், ஆட்சியாளரின் சர்வாதிகாரப் போக்கைப்பற்றியும, அறிவு கொல்வாததும், ஆபாசமானதுமான ஒரு கட்டுக்கதையைத் தீபாவளி என வைத்து, அதை ஒரு பண்டிகையாகக் கொண்டாடுவது குருட்டுப்பழக்கவழக்கமமாளவேண்டியது குறித்தும; தற்போது அவதிக்குள்ளாகியிருக்கும் நெசவுத் தொழிலாளிகளின் நிலை குறித்தும சுமார் 3-மணி நேரம் மிக விளக்கமாகப் பேசினார். தலைவர் முடிவுரைபர, செயலாளர் நன்றியில விழா முடிவுற்றது.

(வி. உ.)

## குன்னூர்

குன்னூர், அக். 25—

திருவள்ளுவர் ஆண்டு 1980 ஐப்பசித்திங்கள் 5ம நாள (21—10—49) வெள்ளிக்கிழமை மாலை மணிக்கு ‘ஜலஹர் பேட்டை’யில் தோழர் சுப்பையா தலைமையில், திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழா குன்னூர் திராவிட முன்னேற்றக் கழகத்தாரால் கொண்டாடப்பட்டது. அவ்வமயம் தோழர் கோவிந்தன் “சுதந்திரத்திற்குப் பின்” என்ற தலைப்பில் பேசினார். அடுத்துத் தோழர் முருகு சுப்பிரமணியம் அவர்கள் “திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையும் நோக்கமும்” என்ற தலைப்பில் அரிய கருத்துக்களுடன் மிக அழகாக, பாமரரும் புரிந்துகொள்ளும்படி பேசினார். பின்னர் சேலம தோழர் அழகிரி “மாற்றமதேவை” என்ற தலைப்பில் வெகு அழகாக பேசினார். பின்னர் செயலாளர் நன்றிகூறக் கூட்டம இனிது முடிந்தது. (வி—உ)

## சிறுத்தொண்ட நல்லூர்

சிறுத்தொண்ட நல்லூர் அக். 20—

16-10-49 மாலை 7 மணிக்கு திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழா, திரு. பாலராசு தலைமையில் நடைபெற்றது. தமிழ்ராசன் திராவிடப்பண் பாடினார். திராவிடர் கழகம், திராவிடமுன்னேற்றக்கழகமாக மாறிய விதங்களைப்பற்றியும், தற்கால அரசியல், சமுதாய பொருளாதார நிலைகளைப் பற்றியும் தோழர்கள் அறவேந்தன், மணி, சிவசங்கு, இளமுத்து ஆகியோர் விளக்கிப்பேசினர். 9 30க்கு சிவசங்கு நன்றி நவில, விழா இனிது முடிந்தது. (வி-உ)

## சென்னை ஓட்டேரி

சென்னை ஓட்டேரி, அக். 21—

20 10 49 ஞாயிறு மாலை 5 45 மணிக்கு சென்னை ஓட்டேரி பிரிக்லின் ரோட் 21-வது எண்ணுள்ள கழக மனையில், ஓட்டேரி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், திராவிடனுக்கு தீபாவளி திருநாளா? என்ற தலைப்புக்கொண்ட ஓர் பொதுக் கூட்டம், தோழர் ஏ. கே. சாமி தலைமையில் கூடியது. அப்போது, புலவர் வே. த. அர்சுனனார், பி. ஜகநாதன், எம் மூர்த்தி, அபிப். ஆகிய தோழர்கள் விமரிசையாகவும், வெகு விளக்கமாகவும் சொற்பொழிவாற்றினார்கள். விளம்பர உறுப்பினர்; ஆர். டி. அரசு நன்றி கூற இரவு 8-45 மணிக்கு முடிவுற்றது. (வி—உ)

## திருத்துறைப்பூண்டி

திருத்துறைப்பூண்டி, அக். 25—

திராவிட முன்னேற்றக் கழகம் திருத்துறைப்பூண்டி கிளையின் துவக்க விழா, மக்களின் பேராதரவும், பேரன்பும் பெற்று மிகச் சிறப்பாக நட்ந்தேறியது.

மாணவர்கள், இளைஞர்கள், வயோதிகர், தாய்மார்கள பலரும் பெருந்திரளாக கூடியிருந்தனர். கூட்டம சன்னதித் தெருவில், தோழர் ஹாஜாபீர் தலைமையில் நடைபெற்றது. அதுபோது தோழர் தியாகராசன் திராவிடப் பண் இசைத்தார். தோழர்கள் இரா. சாத்தையன், ஈ வெ. கி. சம்பத் ஆகிய இருவரும் விரிவான விளக்கவுரை ஆற்றினார்கள். தலைவர் முடிவுரைக்குப்பின் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிந்தது. (வி-உ)

## ஏஜெண்டுகள் தேவை

கீழ்க்கண்ட ஊர்களுக்கு ‘மாலைமணி’ விற்பனை செய்ய முன்பணம் கட்டக்கூடிய ஏஜெண்டுகள் தேவை.

(1) நாமக்கல்,
(2) கீவளூர்.
(3) முசிறி.
(4) திருமலைராயன் பட்டணம்.
(5) செம்மனார்கோயில்.
(6) மங்கநல்லூர்.
(7) பாப்பா நாடு.
(8) ஜோலார் பேட்டை.
(9) பாங்கிப்பேட்டை.
(10) துவரன்குறிச்சி.

‘மகிழ்ச்சி’ சிறுகதை மாதப்பத்திரிகை

ஆண்டுசந்தா ரூ. 1½ தனிஇதழ்அணா 2

ஏஜண்டு இலலாத ஊர்களுக்கு இதழ் 1-க்கு ¼ அணா வீதம டிபாசிட் கட்டக்கூடியவர்கள தேவை.

மகிழ்ச்சி காரியாலயம்,
விருதுநகர்.

Printed & Published by T. M Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1.